பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விழயல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆழ 30 சனிக்கிழமை 14.08.2021 கதிர் 282

### இனி இது ரகசியம் அல்ல!

வடக்கில் அரச – அரசியல் – நிர்வாகங்களின் குளறுபடிகளை அடுத்து, அவை குறித்து ஆராய்ந்து, நேர் சீர் செய்யும் நடவடிக்கைகளை எடுப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது இணைப்புச் செயலாளரான கீதநாத் காசிலிங்கத்தை பக்கம்02

## மேலும் 155 பேரை ஒரே நாளில் சாகடித்த கொரோனா வைரஸ்!

இலங்கையில் மேலும் 155 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 775 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 155 பேரில் 85 ஆண்களும், 70 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 3 பெண்கள் 30 வயதுக்குட்பட்டவர்கள். 14 பெண்கள், 27 ஆண்கள் என 41 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 111 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில், 53 பெண்களும், 58 ஆண்களும் அடங்குகின்றனர்.

## 3 ஆயிரத்து 142 பேருக்கு நேற்று கொரோனா உறுதி

இலங்கையில் நேற்று 3 ஆயிரத்து 142 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 48 ஆயிரத்து 260ஆக உயர்வடைந்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 173 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2

# நாடு கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட காத்திரமான முடிவை எடுக்கவேண்டும் அரசு

## வடக்கு - கிழக்கு ஆயர்கள் மன்றம் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 14

அரசானது மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தி, நாடு கொரோனாப் பெருந்தொற்றிலிருந்து விடுபடவும், நாட்டில் சமத்துவமும் சமாதானமும் நிலவவும், நீதி கேட்டுப் போராடுபவர்களின் அடிப்படைக் கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்படவும் காத்திரமான முடிவுகளை எடுத்துச் செயற்பட வேண்டும்.

– இவ்வாறு சமகால சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு வடக்கு – கிழக்கு ஆயர்கள் மன்றத்தால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 10

### கொரோனாத் தொற்றால்

## யாழில் நேற்றும் 5 பேர் உயிரிழப்பு

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் நேற்று மேலும் 5 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கைதடியைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவரும், கொழும்புத்துறையைச் சேர்ந்த 79 வயதுடைய ஒருவரும், புத்தூரைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவரும், ஏழாலை மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய ஆண் ஒருவரும் மற்றும் கோண்டாவிலைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரும் என 5 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 176ஆக உயர்வடைந்துள்ளது.

## யாழ்.மாவட்டம் கடும் நெருக்கடிக்குள்; விடுதிகளில் தொற்றாளர்கள் நிரம்பல்

### போதனா பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவிப்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைப் பொறுத்தவரை எமது இக்கட்டான நிலையை மக்களுக்கு அறிவிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. தற்போதைய நிலைவரத்தின்படி எமது வைத்தியசாலையின் விடுதிகள் மற்றும் அதிதீவிர சிகிச்சை பிரிவுகள் எல்லாமே கொரோனா நோயாளிகளால் நிரம்பியிருக்கின்றன.

– இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 10




### யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

## கொரோனோவால் மரணித்தோரின் சடலங்களை எரியூட்டுவதில் சிக்கல்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

கொரோனா வைரஸ் தொற்றால் இறந்தவர்களின் சடலங்களை தகனம் செய்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொரோனாத் தொற்றால் இறந்தவர்களின் சடலங்களைத் தகனம் செய்வதில் சில பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றோம்.

யாழ்.மாவட்டத்தைப்பொறுத்தவரை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் மாத்திரமே மின்சாரம் மூலம் சடலங்களைத் தகனம் செய்யும் வசதி இருக்கின்றது. தினமும் அங்கு நான்கு பேரை மட்டுமே மின்தகனம் செய்யக்கூடிய வசதி இருக்கின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் சரி, ஏனைய வைத்தியசாலைகளிலும் சரி கொரோனாவால் உயிரிழப்பவர்களை அங்குதான் கொண்டு செல்ல வேண்டிய தேவை இருக்கின்றது.

கடந்த ஐந்து 2

## வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருவிழாவுக்கு அனுமதி மறுப்பு

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

நாட்டில்கொரோனாத்தொற்று நோய் அபாயநிலை நிலவும் சூழலில் ஆரம்பமாகவுள்ள வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய மகோற்சவத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய மகோற்சவ கால ஏற்பாட்டுக் கூட்டம் நேற்று வடமராட்சி வடக்கு பிரதேச 2



## மங்களவுக்கு கொரோனா

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவருக்கு நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசின் வடக்கு, கிழக்கு மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கான விசேட பிரதிநிதி என்ற அந்தஸ்துடன் அனுப்பி வைத்தமையும் –

அதனையடுத்து, அரசியல் ஊழல்கள், குளறுபடிகள் பற்றிய விடயங்கள் ஒவ்வொன்றாகக் கையாளப்படத் தொடங்கியிருக்கின்றமையும் தெரிந்தவைதான்.

அரச உதவியில் வீடமைக்கும் விடயத்தில் வீட்டுத் திட்டப் பயனாளிகளைத் தெரிவு செய்வதில் இடம்பெற்ற ஊழல், முறைகேடுகள் கண்டு பிடிக்கப்பட்டு, அம்பலப்படுத்தப்பட்டு, இப்போது ஓரளவு சீர் செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இன்னொரு முக்கியமான விடயம் ஜனாதிபதியின் நேரடி வழிப்படுத்தலில் இதே கீதநாத் காசிலிங்கம் மூலம் வடக்கில் கவனிக்கப்படுவதாக அறியவருகின்றது.

வடக்கில் பெரும் 'பிஸ்னஸாக' உருவெடுத்திருக்கும் போதைப்பொருள் வர்த்தகத்தின் முதுகெலும்பை முறிப்பதுதான் அது.

சில, பல புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு, வலை விரிக்கப்படுவதாக அறிய வருகின்றது.

பலரையும் ஆச்சரியப்படுத்தும் விதத்தில் எதிர்பாராத பெரும் முதலைகளும் இதில் சிக்கக் கூடும் எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றது.

இது பற்றிய மேலதிக தகவல்களை நான் விவரிப்பது, விரிக்கப்படும் வலையைப் பலவீனப்படுத்தி விடும். அதனால் விரிக்காமல் – விவரிக்காமல் – விடயத்தை இத்தோடு சுருக்கிக் கொள்கிறேன்.

இதேசமயம் போதைப்பொருள் பாவனையாளர்களை அதிலிருந்து விடுவிப்பதற்கான புனர்வாழ்வு மையம் ஏதும் வடக்கில் இல்லை. உடனடியாக புனர்வாழ்வு மையம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்து, இயக்குவதற்கான ஏற்பாடுகளில் கீதநாத் காசிலிங்கம் ஈடுபட்டுள்ளார். அதற்கு அரச உயர் மட்டத்தின் அனுமதியையும் அவர் பெற்றுள்ளார் என்றும் தெரிகின்றது.

யாழ்ப்பாணத்தில் கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கின்றோம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் பல பிரமுகர்களின் வாழ்வும் கூட இந்தப் புதிய புனர்வாழ்வு முகாமில் சம்பவிக்கும் வாய்ப்புண்டு.

★ ★ ★

வன்னிபுவனம் செஞ்சோலையில் விமானக்குண்டு வீச்சில் படுகொலையுண்ட தமிழ் உறவுகளின் 15ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று.

இந்தக் குண்டு வீச்சுக் கொடூரம் நடந்த அதே தினத்தில்தான் கொழும்பில் பாகிஸ்தான் தூதுவர் பயணித்த வாகனத் தொடரணி மீது கொள்ளுப்பிட்டிப் பகுதியில் வைத்துத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. தூதருக்கு ஏதும் நேரவில்லை. வேறு ஏழு பேர் உயிரிழந்தனர்.

நிமிடத்துக்கு நிமிடம் 'பிரேக்கிங் நியூஸ்' போட்டு, கொள்ளுப்பிட்டிக் குண்டுத் தாக்குதலை நாடு முழுவதும் பரபரப்பாக்கிய கொழும்பு தொலைக்காட்சி ஊடகம் ஒன்று, செஞ்சோலைக் குண்டு வீச்சுத் தாக்குதலை முற்றாக இருட்டடிப்புச் செய்து தனது சிங்கள அரச விசுவாசத்தைப் பச்சையாக காட்டிக் கொண்டது.

உலகெங்கும் இருக்கும் ஈழத் தமிழர்கள் செஞ்சோலைக் குண்டு வீச்சுக் குறித்து – அப்பாவி இளம் சிறார்கள் துடிக்கத் துடிக்கக் கொன்றொழிக்கப்பட்ட கொடூரத் தாக்குதல் குறித்து – பதறியடித்துக் கொண்டிருந்த சமயம், அந்த அரச பயங்கவாதக் கொடூரத்தை அடியோடு மூடி மறைத்து, கொழும்புத் தாக்குதல் பற்றிய செய்திகளை நிமிடத்துக்கு நிமிடம் பிரேக்கிங் நியூஸாக ஒளிபரப்பி கொச்சைத்தனம் பண்ணியது அந்த ஊடகம்.

தமிழர்களின் ஆன்மாவில் ஆழமான ரண களத்தை ஏற்படுத்திய அந்தத் தாக்குதலை மூடி மறைத்தமை ஈனத்தனம்.

அந்த ஈனத்தனத்தின் உரிமையாளரை எமது தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளும் சேர்ந்து அண்மையில் 'ஆஹா, ஓஹோ...!' என்று புகழ்ந்தமை அதிலும் விடப் படு கொச்சைத்தனமாகும்.

தங்கள் செய்திகள், படங்கள் ஒளிபரப்பாக வேண்டும் என்ற நப்பாசை ஈனத்தனம் காரணமாக அந்தக் குரூர மகாராஜாக்களுக்கு பழையவற்றை மறந்து சாமரம் வீசினார்கள் நமது தமிழ் அரசியல் மகாராஜாக்கள்...!

எது, எப்படி என்றாலும், செஞ்சோலை சிறார்களை விமானக்குண்டு வீச்சில் கொன்றொழித்த அரச பயங்கரவாதக் கொடூரத்தை எந்த சக்தியாலும் – மின்னல், இடிமுழக்கம் போன்றவற்றால் கூட – மூடி மறைக்க முடியாமல் போயிற்று. அது அம்பலப்பட்டேயாகியது என்பது வரலாற்று நியதி.

– மின்னல் –

---

## வடமராட்சி ஸ்ரீ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளர் ஆழ் வாப்பிள்ளை சிறீ தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தின் முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன:–

இவ்வருடம் மகோற்சவம் நடத்துவதற்கான அனுமதி இல்லை.

பூஜைகள் பக்தர்கள் பங்பற்றுதல் இன்றி நடைபெறும். சுகாதார அமைச்சின் சுற்றிக்கையின் பிரகாரம் மதத்தலைவர்கள் உட்பட 100 அடியார்களே உரிய நேரத்தில் வழிபாடு செய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

ஆலய உள்வீதியில் மட்டுமே பூஜைகள் மற்றும் சமய நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் வெளிப்புறச் சூழலில் எந்தவிதமான சமய நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் மற்றும் நேர்த்திக் கடன் நிறைவேற்றுதல் என்பவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் விசேட தனியார், அரசு போக்குவரத்து சேவை இடம்பெறுவதற்கு அனுமதி இல்லை. ஆலய சுற்றாடலில் வீதிகளில் மண்டகப்படி வைத்தல், பிரசாதம் வைத்தல், தாக சாந்தி, அன்னதானம் வழங்கல் போன்றவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

தற்போது நாட்டில் நிலவுகின்ற கொரோனா அசாதாரண சூழ்நிலையில் அங்கபிரதட்சணம் செய்தல், அடி அழித்தல், கற்பூர சட்டி எடுத்தல், காவடி, தூக்கு காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்களின்போது கொரோனாக் கட்டுப்பாடு தொடர்பான சுகாதார நடைமுறைகளை முறையாகக் கடைப்பிடிக்க முடியாத சூழல் ஏற்படுவதால் இவ்வருடம் மேற்படி நேர்த்திக் கடன்களை ஆலய வளாகத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலய சுற்றாடல் மற்றும் ஆலயத்தை அண்டிய பகுதியில் அடியார்கள் மற்றும் பொதுமக்கள் கூடுவதற்கான தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள், கலைநிகழ்வுகள் மற்றும் பொழுது போக்குக்கான அனைத்து நிகழ்வுகளும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே ஆலய சூழலில் இயங்கி வந்த இரண்டு கடைகள் மாத்திரம் தொடர்ந்தும் இயங்கி வருவதற்கு அனுமதிக்கப்படும். எனினும், இயங்கி வரும் வியாபார நிலையங்களை விரிவாக்க அனுமதி இல்லை.

ஆலய சூழலிலுள்ள வெற்று காணிகளிலோ அல்லது கட்டடங்களிலோ புதிய கடைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதுடன் நடமாடும் வியாபாரமும் அனுமதிக்கப்படமாட்டாது. ஆலய பூஜைகளின் போது ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றத் தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

போக்குவரத்து பாதைகள் தடைப்படுத்தப்படும்போது பிரயாணிகள் மாற்றுவழிப் பாதையைப் பிரயோகிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்காமை, மீறுகின்றமை போன்றவற்றால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைக் கருத்தில்கொண்டு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுகாதார அமைச்சால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சுகாதார சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் அத்துடன் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் மற்றும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியால் கூறப்பட்ட சுகாதார நடைமுறைகளைக் கருத்தில்கொண்டு மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல்களை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பூஜை காலங்களில் ஆலய சுற்றாடல்களில் இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய பக்த அடியார்கள் தங்கள் வீடுகளில் இருந்து மாயவனை வணங்கி அருள் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

---

## 3 ஆயிரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

3 இலட்சத்து 4 ஆயிரத்து 628 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

---

## கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாதங்களில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 140 பேரும், ஏனைய வைத்தியசாலைகளில் 16 பேரும் என்று மொத்தமாக 156 பேரை மின்தகனத்துக்கு அனுப்ப வேண்டி இருந்தபடியால் இன்னும் பல பேரின் சடலங்கள் தேங்கி இருக்கின்றன – என்றார்.

---

## மங்களவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரிசோதனையின்போது கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவரது பாணந்துறை வீடு ஊழியர்களுடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து தன்னுடன் தொடர்பைப் பேணியவர்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார்.

தற்போது தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மங்கள சமரவீரவின் உடல்நிலை சீராக இருக்கின்றது என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

செஞ் சோலையில் இலங்கை விமானப் படையின் குண்டு வீச்சினால் இனப் படுகொலை செய்யப்பட்ட
54 மாணவிகள், 7 பணியாளர்கள் உட்பட 61 எம் தமிழ் உறவுகளின் 15 வது ஆண்டு நினைவு நாள் - 14.08.2021
15TH YEAR REMEMBERANCE DAY OF 54 SCHOOL GIRLS AND
7 EMPLOYEES OF SENCHOLAI IN THE GENOCIDE BY SRI LANKAN AIR FORCE. - AUGUST 14, 2021.



* செஞ்சோலை இனப் படுகொலை, 150 இற்கு மேற்பட்ட மாணவிகளைப் படுகாயப்படுத்திய போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை நிகழ்த்திய இலங்கை அரசின் குற்றவாளிகளைச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் (INTERNATIONAL CRIMINAL COURT-ICC) நிறுத்துவோம் !
* முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்தில் படுகொலை செய்யப்பட்ட 54 மாணவிகள், 7 பணியாளர்கள் உட்பட 61 எம் தமிழ் உறவுகளுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!!

தமிழ்த் தேசியக் கட்சி (த.தே.க) TAMIL NATIONAL PRTY (T.N.P)

# சமையல் எரிவாயு விநியோகத் தட்டுப்பாடுகளுக்கு நுகர்வோர் அதிகாரசபை மீது குற்றஞ்சுமத்த முடியாது

## லசந்த அழகியவன்ன கூறுகிறார்

நுகர்வோர் அதிகாரசபை தமது பொறுப்பை நிறைவேற்றாமையால் நாட்டில் லாப் சமையல் எரிவாயு விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தமது அமைச்சுக்குரிய நுகர்வோர் அதிகாரசபை இப்பிரச்சினைக்கு தீர்வு காண எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருவதை பொறுப்புடன் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும் என சுட்டிக்காட்டி கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் மேம்பாடு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன அறிக்கை வெளியிட்டுள்ளார்.

லாப் சமையல் எரிவாயு நுகர்வோர் எதிர்நோக்கியுள்ள அசௌகரியத்துக்கு விரைவாக தீர்வு வழங்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மிலால் கடந்த 8ஆம் திகதி நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்ததுடன் அதற்கு பதிலளிக்கும் முகமாகவே இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

2019 ஆம் ஆண்டு ஒரு மெட்றிக் தொன் சமையல் எரிவாயுவின் விலை 361 அமெரிக்க டொலராக காணப்பட்ட சந்தர்ப்பத்தில் நுகர்வோர் அதிகார சபையால்12.5 கிலோகிராம்நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர் 1,493 ரூபாவுக்கு வழங்கப்பட்டது. ஆனால் தற்போதைய கொரோனாத் தொற்றின் மத்தியில் உலக சந்தையில் ஒரு மெட்றிக் தொன் 651 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

இதற்கமைய கடந்த 6 மாதகாலமாக குறித்தநிறுவனம்சமையல்எரிவாயுவின் விலையை 750 ரூபாவாக அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்து வந்துள்ள நிலையில் அரச கொள்கைகளுக்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கான பொறுப்பு தமக்கு வழங்கப்பட்டுள்ளதால் விலை அதிகரிப்புக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

தற்போதைய நிலையில் லாப் சமையல் எரிவாயு சந்தையில் இன்மையால், நுகர்வோர் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளமையை ஏற்றுக்கொள்கிறோம். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சரவை, நிதியமைச்சு வர்த்தக அமைச்சுடன் இணைந்து, இப்பிரச்சினைக்கு தீர்வை வழங்கத் தனது அமைச்சும் நுகர்வோர் அதிகாரசபையும் ஒத்துழைப்பு வழங்கும்.

# பிள்ளைகளால் தாய், தந்தை கொலை 5 சம்பவங்கள் அண்மையில் பதிவாகின

## பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தகவல்

இலங்கையில் தன் பிள்ளைகளால் தாய் அல்லது தந்தை கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஐந்து பதிவாகியுள்ளன என பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஏறாவூர் பொலிஸ் பிரிவில் செங்கலடி பிரதேசத்தில், 65 வயது தாய் ஒருவர் தன் 40 வயது மகனால் கொலை செய்யப்பட்டுள்ளார். மதுபோதையில் வந்த தன் மகனால் தாய் இவ்வாறு கழுத்து அறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த வருடத்துக்குள் இதே போன்று, தம் பிள்ளைகளால் தாய் அல்லது தந்தை கொலை செய்யப்பட்ட 5 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது மிகவும் கவலைக்குரிய ஒரு விடயம். இந்த சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யும் வேளையிலும் அவர் மது போதையில் இருந்துள்ளார்.

மேலும் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கத்தி பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர் 65 வயதான வேலுப்பிள்ளை தவமணி என்றும், இந்த கொலைச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அவரின் மகன் 45 வயதான வேலுப்பிள்ளை சந்திரன் என்றும் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என குறிப்பிட்டுள்ளார்.

# அவசர அவசரமாக உற்பத்தி செய்யப்பட்ட தடுப்பூசிகள் உரிய பயனுடையவை அல்ல!

## திஸ்ஸ விதாரண கருத்து



உலகில் திடீரென கொவிட் தொற்று தீவிரமடைந்த நிலையில், கொவிட் தடுப்பூசிகள் அவசரமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

எனவே அவை உரிய பயன் கொண்டவை அல்ல என்றுநாடாளுமன்றஉறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

தட்டம்மை, போலியோ மற்றும் பெரியம்மை ஆகியவற்றுக்கு மருத்துவநிபுணர்கள் தடுப்பூசிகளை தயாரிக்க குறைந்தது ஏழு ஆண்டுகள் பிடித்தன.

எனினும் கொவிட்டுக்கான தடுப்பூசிகள் அவசரமாக தயாரிக்கப்பட்டுள்ளன.

மொடர்னா மற்றும் பைஸர் தடுப்பூசிகளை தயாரிக்கப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் மரபணு மாற்றப்படும் ஒரு நவீன தொழிநுட்பமாகும்.

இது மரபணு மாற்றப்பட்ட உணவை உற்பத்தி செய்வதைப் போன்றது. மரபணு மாற்றப்பட்ட உணவு ஐரோப்பாவில் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் மொடர்னா மற்றும் பைஸர் போன்ற தடுப்பூசிகள் பல நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த நிலையில் சினோபோர்ம், ஸ்புட்னிக் வி மற்றும் அஸ்ட்ராஜெனெகா ஆகியவை மிகவும் பயனுள்ளவை என்று கூற முடியும் எனவும் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

# உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நாடாளுமன்றத்தில் அன்டிஜன் சோதனை

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை நடத்தப்பட உள்ளதாக நாடாளுமன்றின் பிரதம படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரையில் இந்த பரிசோதனை நடத்தப்பட உள்ளது.

நோய்த் தொற்றாளர்கள் பதிவாகியுள்ள இடங்களிலிருந்து வரும் பணியாளர்களை பரிசோதனைக்கு உட்படுத்துவது மிகவும் பொருத்தமானது என சுகாதார அதிகாரிகள் பரிந்துரை செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களின் நலன்களை உறுதி செய்யும் நோக்கில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 பேருக்கும் பணியாளர்கள் பலருக்கும் கொவிட் நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொவிட் பணிக்குழு தொடர்பில் ரணில் கூறிய கருத்து சரியானது

## அடித்துக் கூறுகிறார் ராஜித சேனாரத்ன



கொவிட் பணிக்குழு தோல்வியடைந்துள்ளது என்று, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியமை சரியானது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொவிட் பணிக்குழு தொற்றுநோயைக் கட்டுப்படுத்தத் தவறியமையால், அது தோல்வியடைந்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். செய்தியாளர் சந்திப்பொன்றில் வைத்துக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், கொவிட் பணிக்குழு, சுகாதாரத்துறை அதிகாரிகள் மற்றும் மருத்துவ நிபுணர்களை உள்ளடக்கியது.

# கொழும்பு வைத்தியசாலையில் வரிசையில் நின்ற இருவர் சாவு

கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு வந்த நோயாளிகள் இருவர் திடீர் மரணமடைந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

ஒட்சிசன் மட்டம் குறைவடைந்தமையால் குறித்த இருவரும் வெளி நோயாளர் பிரிவில் உயிரிழந்துள்ளனர் எனத்தகவல்வெளியாகியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை வரையில் இலங்கையில் ஒட்சிசன் உதவியுடன் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை 615 ஆகும். எதிர்வரும் நாள்களில் ஒட்சிசன் உதவியுடன் சிகிச்சைபெறும் நோயாளிகளின் எண்ணிக்கை 1,000 வரை அதிகரிக்கக் கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒட்சிசனுக்கான தேவை பாரியளவில் அதிகரிக்கக் கூடும் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தம்மிக்க பாணி மருந்துக்கு வழங்கப்பட்ட உரிமம் ரத்து

கொவிட் வைரஸுக்கு மருந்தாக ஊக்குவிக்கப்பட்ட 'தம்மிக்க பெனிய'என்ற மருந்துக்கு வழங்கப்பட்ட உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஆயுர்வேத ஆணையாளர் தம்மிக்க அபேகுணவர்தன இதனை அறிவித்துள்ளார்.அவரின் மருந்துக்கு தற்காலிக உரிமம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் மருத்துவ பரிசோதனைகளின் போது, அவர் கூறியமை போன்று, மருந்து பயனுள்ளமை நிரூபிக்கப்படவில்லை. இதன் விளைவாக, தற்காலிக உரிமம் இப்போது ரத்து செய்யப்பட்டுள்ளதாக அபேகுணவர்தன கூறியுள்ளார். ஆயுர்வேத பயிற்சியாளர் தம்மிக்க பண்டார கடந்த ஆண்டு, தமது மருந்தை அறிமுகப்படுத்தினார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவும் தம்மிக்க பண்டாரவின் கொவிட் மருந்தை பரிசோதித்தவர்களில் ஒருவராவர். கேகாலை ஹெட்டிமுல்லாவைச் சேர்ந்த ஆயுர்வேத பயிற்சியாளர் தம்மிக்க பண்டார நாடாளுமன்றத்தில் சபாநாயகரைசந்தித்துஇந்தமருந்தைவழங்கியிருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சட்டமா அதிபரின் முடிவு தவறா?

**கப்பம் அறவிடுவதற்காக இலங்கைக் கடற்படையின் புலனாய்வு அதிகாரிகளால் கடத்தப்பட்டு பின்னர் காணாமலாக்கப்பட்டவர்கள் என்று கூறப்படும் பதினொரு தமிழ் இளைஞர்களின் பெற்றோர்கள், சட்டமா அதிபர் சஞ்சய இராஜரட்ணத்துக்கு எதிராக லஞ்ச, ஊழல் முறைப்பாடுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவிடம் புகார் செய்திருக்கின்றார்கள்.**

**மேற்படி பதினொரு இளைஞர்களும் கடத்திக் காணாமலாக்கப்பட்ட விடயம் தொடர்பாக கொழும்பில் இயங்கும் நிரந்தர 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.**

**2008 மற்றும் 2009இல் அரங்கேறிய இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பான விடயம் இப்போது சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அனைத்தினதும் கழுகுப் பார்வைக்கு உள்ளாகியிருக்கின்றது.**

**இந்தக் கடத்தல் மற்றும் காணாமலாக்கப்பட்ட சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியான 'நேவி சம்பத்' என்று அழைக்கப்படும் லெப்டினன்ட் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராய்ச்சியை 2018 ஒகஸ்டில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கைது செய்திருந்தனர்.**

**இந்தக் கடத்தலின் பிரதான சந்தேக நபர்களில் ஒருவரை மறைத்து வைத்தார் என முன்னாள் கடற்படைத் தளதியும் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரியுமான அட்மிரல் ரவீந்திர விஜேரத்தின மீது குற்றப் புலனாய்வுத்துறையினர் குற்றம் சுமத்தினார். அதனால் அவரையும் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.**

**இதே சமயம் இந்த ஆள்கடத்தல், கப்பம் கோரல், காணாமலாக்கப்படல் விவகாரத்தில் 14ஆவது சந்தேக நபராக கடற்படைத் தளபதியாக இருந்த அட்மிரல் வஸந்த கரனன்கொடவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பெயரிட்டனர்.**

**தனக்குக் கீழ் இருந்த படையணியினர் சட்ட விரோதமாக ஆள்களைக் கடத்திக் காணாமலாக்குகின்றனர் என்று தெரிந்திருந்தும் அது குறித்து நடவடிக்கை எடுக்காமல் செயற்பட்டதன் மூலம் குற்றமிழைத்தார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.**

**இந்தக் குற்றச்சாட்டையே தற்காலிகமாகத் தொடர விரும்பவில்லை என சட்டமா அதிபர் சார்பில் கொழும்பு நிரந்தர ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தில் கடந்த 4ஆம் திகதி தெரிவிக்கப்பட்டது.**

**அதற்கு எதிராகவே இப்போது சர்வதேச ரீதியில் கூட ஆட்சேபனை கிளப்பப்பட்டிருக்கின்றது.**

**சட்டமா அதிபரின் இந்த முடிவை விமர்சித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை தமது இந்தத் தீர்மானத்துக்கான காரணத்தை அவர் வெளியிடவேண்டும் எனவும் கோரியிருக்கின்றது.**

**அதேசமயம், சட்டமா அதிபருக்கு எதிராக இந்த விடயத்தை ஒட்டி லஞ்ச, ஊழல் முறைப்பாட்டு விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடும் செய்யப்பட்டிருக்கின்றது.**

**இத்தகைய முறைப்பாடு பயனுள்ளதா, ஒழுங்கானதா என்ற கேள்வி இப்போது எழுகின்றது.**

**முதலாவது – ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டைத் தொடர்வதா, இல்லை கைவிடுவதா என்பதைத் தீர்மானிக்கும் முழு அதிகாரமும் சட்டமா அதிபருக்கு உரியது. லஞ்ச, ஊழலின் அடிப்படையில் அவர் அத்தகைய தீர்மானத்தை எடுத்தார் என்று முறைப்பாடு செய்வதாயின் குறைந்த பட்சம் அதற்கு ஏதேனும் ஆதாரம் இருக்க வேண்டும். அப்படி சான்றாதாரம் இல்லாமல் முறைப்பாடு செய்வது அர்த்தமற்றது.**

**அதேசமயம், இந்த விடயத்தில் சட்டமா அதிபர் அரசியல் ரீதியான அழுத்தங்களுக்கு நிறைவேற்றதிகாரத்தின் விருப்புக்காக இவ்வாறு முடிவு செய்துள்ளார் என்று கூறுவதற்கும் ஆதாரங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.**

**முற்றும் முழுதாக சட்ட ரீதியான அடிப்படையிலேயே இவ்வாறு முடிவெடுத்திருக்கின்றார் என சட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.**

**தம்மை இந்த வழக்கில் எதிரியாகக் குற்றம் சுமத்துவதற்கு எதிராக அட்மிரல் வஸந்த கரனன்கொட மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். அதை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், வஸந்த கரன்கொடவுக்கு எதிராக கொழும்பு நிலையான 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றத்தில் வழக்கை விசாரணை செய்வதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை வழங்கியுள்ளது.**

**அந்த இடைக்காலத் தடை உத்தரவின் அடிப்படையிலேயே வஸந்த கரனன்கொடவுக்கு எதிராக கொழும்பு ட்ரயல் அட் பார் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை செய்வதிநின்றும் தற்காலிகமாக விலக்கியுள்ளார் என சட்டமா அதிபர் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.**

**மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவை ஏற்று, அதனடிப்படையில் தாம் செயற்படுகின்றார் என்பதன் அடிப்படையிலேயே அதனைத் தனது தற்காலிக முடிவாக அவர் அறிவித்திருக்கின்றார்.**

**அப்படி அவர் அறிவிக்காவிட்டால் அவர் மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவை மீறியவராவார்.**

**ஆகவே இந்த விடயத்தில் சட்டமா அதிபரை விமர்சிப்பதில் – நோவதில் – அர்த்தம் இல்லை என்பதுதான் சரியாகும்.**

---

சிறுமி ஹிஷாலினியின் மரணம் தொடர்பாக;

## ரிஷாத்தின் மனைவியின் சகோதரனை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உத்தரவு

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் மனைவியின் சகோதரரான மொஹமட் ஷியாப்தீன் இஷ்மத்தை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதற்கமைய அவரை எதிர்வரும் 16ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ரஜிந்ர ஜயசூரிய, சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

ரிஷாத் பதியுதீனின் கறுவாத்தோட்டம் பகுதியிலுள்ள வீட்டில் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்த 16 வயதான சிறுமி ஹிஷாலினி மரணித்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் மொஹமட் ஷியாப்தீன் இஷ்மத் 4 ஆவது சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளார்.

இந்த வழக்குத் தொடர்பில் கறுவாத்தோட்டம் பொலிஸார் நீதிமன்றில் விளக்கமளித்திருந்தனர்.

இதன்போது, 2016 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணியாற்றியிருந்த யுவதியொருவர், சந்தேக நபரால் இருவேறு சந்தர்ப்பங்களில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

நுவரெலியாவிற்கு சுற்றுலா சென்றிருந்த சந்தர்ப்பத்தில், அங்குள்ள விருந்தகத்தில் வைத்து சிறுமியை துஷ்பிரயோகம் செய்ததாகவும் பின்னர் கறுவாத்தோட்டம் பகுதியிலுள்ள வீட்டில் வைத்து இரண்டாவது முறையாகவும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வீட்டின் உரிமையாளரிடம் கூறிய போதிலும் அது தொடர்பாக அவர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என பாதிக்கப்பட்ட யுவதி வழங்கிய முறைப்பாட்டில் உள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். எவ்வாறாயினும் குறித்த யுவதியிடம் மீண்டும் வாக்குமூலம் பெறுவதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் கறுவாத்தோட்டம் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

---

## கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் தனியார் காணியொன்று விடுவிப்பு



கிளிநொச்சி - பரவிப்பாஞ்சான் பகுதியில் 2010ஆம் ஆண்டு முதல் படையினர் வசம் இருந்த தனியார் காணியொன்று விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த (வியாழக்கிழமை) காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

2010ஆம் ஆண்டு முதல் படையினர் வசம் இருந்த காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்ட நிலையில் குறித்த காணி தொடர்ந்தும் படையினர் வசம் இருந்தது.

இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் கரேந்ர ரணசிங்கவிடம் காணி உரிமையாளர் கோரிக்கை விடுத்தமைக்கு அமைவாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் மேற்படி காணி விடுவிக்கப்பட்டது.

57ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெயவர்த்தனவால் குறித்த காணி கரைச்சி பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயகரனிடம் கையளிக்கப்பட்டது.

காணி உரிமையாளரின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் காணியை உரிமையாளரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கரைச்சி பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயகரன் தெரிவித்தார்.

பொதுமக்களிடம் உள்ள காணிகளைப் படையினர் படிப்படியாக கையளிப்பது வரவேற்கத்தக்கது எனவும், படையினர் வசம் உள்ள மேலும் சில காணிகளையும் விடுவிக்க படையினர் முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

## கல்கிசையில் 15 வயது சிறுமி விற்பனை; நான்கு இணையத்தளங்களுக்கு தடை

கல்கிசை பகுதியில் 15 வயதான சிறுமியொருவரை பாலியல் செயற்பாடுகளுக்காக இணையத்தளத்தின் ஊடாக விற்பனை செய்வதற்கான விளம்பரங்களை வெளியிட்ட 4 இணையத்தளங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

மகளிர் மற்றும் சிறுவர் பிரிவால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹன தெரிவித்துள்ளார்.

---

## மனைவி மற்றும் பிள்ளைகளைக் காணவில்லை வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

வவுனியா, ஒக. 14

வீட்டிலிருந்த மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளைக் காணவில்லை என குடும்பஸ்தர் ஒருவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

வவுனியா – முதலாம் ஒழுங்கை – மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த சற்குணசிங்கம் தமிழினி (வயது 32) மற்றும் பிள்ளைகளான டனிஸ்கா (வயது 5), கனிஸ்கா (வயது 4) ஆகிய மூவரையும் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் காணவில்லையென அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

கடையொன்றுக்கு வேலைக்குச் சென்று மாலை வீடு திரும்பியபோதே வீட்டில் மனைவி பிள்ளைகளை காணவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

காணாமல் போன பெண் மற்றும் பிள்ளைகள் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் 0777111103, 0775945839 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி தகவல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் - 43

ந.வித்தியாதரன்

1996 ஏப்ரலில் யாழ் குடாநாட்டை சுமார் பத்து ஆண்டுகளின் பின்னர் இராணுவம் மீளக் கைப்பற்றியமையை அடுத்து குடாநாட்டில் அறுநூறுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்களை பெற்றோரும் உற்றாரும் தேடும் படலம் 25 ஆண்டுகள் கடந்தும் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம் நகருக்கு வெளியே பரந்து விரிந்து கிடக்கும் செம்மணி வயல் நிலத்திலும் அதை அடுத்த சதுப்பு தரையிலும் அவர்கள் புதைக்கப்பட்டார்கள் என்பது தான் நிரூபிக்கப்பட்ட உண்மை. இது பற்றிய கருத்தியலை வெளிப்படுத்தியது யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி (வயது 18) மீதான படையினரின் கொடூரப் பாலியல் வல்லுறவும், பின்னரான படுகொலையும், அவரைத் தேடி வந்த அவரின் தாயார், இளைய சகோதரன், அயலவர் ஒருவர் ஆகியோரின் படுகொலைகளுமாகும்.

இலங்கைப் படைகள் எவ்வளவு குரூரத்துடன் நடந்து கொண்டன, அதற்கான களநிலைமையை ஆட்சித் தரப்பு எவ்வாறு ஏற்படுத்திக் கொடுத்துப் பார்த்திருந்தது என்பவை எல்லாம் அன்றைய யதார்த்தங்களின் சாட்சியங்களாகும்.

கிருஷாந்தி குமாரசாமி என்ற தமிழ் சகோதரி – பாடசாலை மாணவி – ஒன்றும் அறியா அப்பாவி – படையினர் ரூபத்தில் வந்த மிருகங்களால் குதறிக் கொன்றொழிக்கப்பட்டமையின் கால்நூற்றாண்டு நினைவில் நாம் நிற்கின்றோம். வரும் ஏழாம் திகதி அந்த நினைவு நாளாகும்.

இந்தக் கட்டுரை தொடருக்கும் அந்தக் கொடூர சம்பவத்துக்கும் நேரடித் தொடர்புகள் எதுவும் இல்லாவிட்டாலும் சில விடயங்களை அதையொட்டி தெரிவிக்க வேண்டிய தேவையுள்ளது. கிருஷாந்தி குமாரசாமி போல பல நூற்றுக்கணக்கானோர் அப்போது காணாமல் ஆக்கப்பட்டனர். மாணவி என்பதாலும், பரீட்சை எழுதி விட்டு பாடசாலைச் சீருடையில் வந்த அவர் செம்மணி வீதியோரக் காவலரணை ஒட்டிய படையினரால் வழிமறிக்கப்பட்டமையைப் பொதுமக்கள் கண்டனர் என்ற தகவல் வெளியானதாலும், அவரைத் தேடிச் சென்று தாய், தம்பியார், அயலவர் ஒருவர் ஆகியோரும் பின்னர் மர்மமான முறையில் காணாமல் போயினர் என்பதாலும் இவ்விடயம் மக்கள் மத்தியில் பெரிய அளவில் குசுகுசுப்பாக பேசப்பட்டது. ஆனாலும் ஆரம்பத்தில் அது சர்ச்சைக்குரிய பெரிய விவகாரமாக உருவெடுக்கவில்லை. காணாமலாக்கப்பட்ட பல நூறு பேரின் விடயங்களில் ஒன்றாகவே அது முடங்கிப் போனது.

1996 நடுப்பகுதியில் இராணுவம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய காலகட்டத்தை நினைவுக்குக் கொண்டுவருவது இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கியமானது.

யாழ்ப்பாணத்தில் சரியான தொலைபேசி சேவையோ இணைய வசதிகளோ அப்போது இல்லை. ஒரு சில டசின் தொலைபேசி இணைப்புகள் அப்போது ஆரம்பத்தில் பொருத்தப்பட்டன. அவற்றில் ஒன்று நான் ஆசிரியராக இருந்த உதயன் பத்திரிகைக்கும் கிடைத்தது.

அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் ஊடகங்கள் என்று சொல்வதற்கு வேறு எதுவுமில்லை. தனித்து உதயன் மட்டுமே. மிகுந்த நெருக்கடிக்கு மத்தியில் செயற்பட்டுக் கொண்டிருந்த காலம்.

தினசரி டசின் கணக்கில் இளைஞர்கள் நட்ட நடு இரவுகளில் வீடுகளிலிருந்து அள்ளப்பட்டுக் காணாமல் ஆக்கப்படுகிறார்கள் என்ற கூக்குரலை நாம் உதயன் ஊடாக எழுப்பிக் கொண்டிருந்தோம். ஆயினும் அது எங்கோ தொலைவில் கிணற்றுக்குள் இருந்து ஒலிக்கும் மெல்லிய தீனமான குரல் போல ஒலித்ததே தவிர, சர்வதேசத்தின் காதுகளில் பெரிய விடயமாக விழவேயில்லை.

அந்தச் சந்தர்ப்பத்தில்தான் புலிகளின் யாழ்ப்பாண நகர பொறுப்பாளராக இருந்து கொண்டு படையினர் மத்தியில் ஓடி, ஒளித்துப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார் மூதூரைச் சேர்ந்த போராளியான குலதீபன். எனது திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் எங்களுக்குள் ஓர் இனம்புரியாத நட்பு இருந்தது.

இராணுவத்தின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு இரண்டு, மூன்று தடவைகள் அடுத்தடுத்து யாழ் நகரை அண்டிய பிரதேசங்களில், மறைவிடங்களில் அவர் என்னைச் சந்தித்தார். இளைஞர்கள் தொடர்ந்து காணாமலாக்கப்படுவதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்றார் அவர். கிருஷாந்தி விடயம் பெரிய விவகாரமாக உருவெடுக் காத நேரமது. எனினும் அந்த விடயத்தை அவர் சுட்டிக்காட்டி ஏதேனும் செய்ய முடியுமா என்று கேட்டார்.

கிருஷாந்தி பாடசாலை மாணவி, பரீட்சை முடிந்து வரும் போது காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார், இதை வைத்து பாடசாலைகளைக் களத்தில் இறக்குவோம் என்றார் அவர். கிருஷாந்தி குமாரசாமி விடயத்துக்குத் தீர்வு வரும் வரைப் பாடசாலை பகிஷ்கரிப்பு ஒன்றுக்கு நாங்கள் அழைப்பு விடுக்கிறோம், நீங்கள் ஒத்துழையுங்கள் என்றார் அவர். நான் எப்படி என்று கேட்டேன்.

எங்கள் பெயரில் – புலிகளின் பெயரில் – ஓர் அறிக்கை வெளியிட்டு பகிஷ்கரிப்புக்குக் கோருவோம், நீங்கள் அதே முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்து, பாடசாலைகளை முடக்குங்கள், விடயம் விஸ்வரூபம் எடுக்கும் என்றார் அவர்.

நான் அதில் உள்ள சிக்கல்களை அவருக்கு விளங்கப்படுத்தினேன். ஒன்று – இப்போதுதான் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து உதயன் பிரசுரமாகத் தொடங்கியுள்ளது. இச்சமயத்தில் அரசியல் அல்லாத – சிவில் நிர்வாகத்தை குழப்புகின்ற – புலிகளின் அறிக்கை ஒன்றுக்கு நாங்கள் இடம் கொடுப்பது ஊடகத்தையே முழுதாக நிறுத்தச் செய்துவிடும். அது உங்களுக்கும் (புலிகளுக்கும்) பாதிப்பு, தமிழ் மக்களுக்கும் பாதிப்பு என்றேன் நான்.

அடுத்தது – கிருஷாந்தி காணாமலாக்கப்பட்டமைக்கும் புலிகளுக்கும் தொடர்பு இல்லை. அதை ஏன் புலிகள் அமைப்புடன் செருகுகிறீர்கள்? பொது அமைப்புகளின் பெயரில் இதை நாம் நகர்த்துவோம் என்றேன். முகவரி இல்லாத கடிதத் தலைப்பு அமைப்புகள் என்றாலும் பரவாயில்லை,



அறிக்கைகளை எங்களுக்கு எட்டச் செய்யுங்கள், மீதியை நான் பார்த்துக் கொள்கிறேன் என்றேன்.

புதிய மாணவர்கள் அமைப்புகளின் பெயர்களில் ஆங்காங்கே வாய்த்த இடங்களில் கையால்தன்னும் எழுதி, பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கக் கோரிக்கை விடுக்கும் போஸ்டர்களை ஒட்டுங்கள், அவற்றைப்



திருச்சி கரிகால்சோழன் கட்டிய நீர் அணைகட்டு முன்பாக எஸ்.டி.எஸ். ஐயா

பற்றிய தகவல்களை தாருங்கள், மீதியை நான் பார்த்துக் கொள்கிறேன் என்றேன்.

என்னுடைய வாழ்வில் மிகப்பெரிய 'ரிஸ்க்' எடுக்கிறேன் என்பதை புரிந்து கொண்டு களத்தில் இறங்கினேன். இன்று பலரும் பலதும் சொல்லலாம். உரிமை கூடக் கோரலாம். ஆனால் களத்தில் உதயன் மட்டுமே தனித்து நின்று கிருஷாந்தி விவகாரத்தை பேருரு கொள்ள வைத்தது. உதயனின் சார்பில் நானே முன் நின்று பொறுப்பெடுத்து அந்த ஆபத்தான பணியையாற்றினேன். பல முகவரி இல்லாத, முன்பின் பெயர் தெரியாத அமைப்புகளின் பெயர்களில் அறிக்கைகள் பறந்தன. ஒட்டப்பட்ட போஸ்டர்கள் எல்லாவற்றுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. குடாநாட்டில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதில் கரிசனையாக இருந்த அரசுக்கு அதற்கான ஒரே ஊடகமாக – மக்களுடன் தொடர்பாடல் செய்யும் பத்திரிகையாக – உதயன் மட்டுமே இருந்தது. அதே உதயன் மூலம் அரசுப் படைகளின் அராஜகத்திற்கு எதிரான மக்களின் உணர்வுகளை நாம் தட்டி எழுப்பினோம்.

எங்கள் செய்திகளால் யாழ்ப்பாணத்தில் பாடசாலைகள் முடங்கின. அடுத்தகட்டமாக வர்த்தக நிலையங்கள், வங்கிகளை முடக்கும் விடயம் அரங்கேறியது. எல்லாம் உதயனின் செய்தி மூலமாக.

அப்போது பி.பி.ஸி. தமிழ்ச் சேவைக்கு நான்தான யாழ் செய்தியாளர். அந்த நெருக்கடி நேரத்தில் குடாநாட்டு மக்களும் அதைத் தவறாது செவிமடுத்தனர். அதை, இரட்டைத் தேவைக்கு நான் வசமாகப் பயன்படுத்தினேன். ஒருபுறம் கிருாந்தி விவகாரத்தில் குடாநாட்டு மக்களை ஒன்று திரட்டி எதிர்ப்பைக் காட்டும் எழுச்சிக்கு. மறுபுறம் அத்தகைய எழுச்சி ஏற்பட்டிருப்பதை உலகுக்கு முரசறைய.

குடாநாட்டில் ஆள்கள் – குறிப்பாக இளைஞர்கள் – கடத்திக் காணாமலாக்கப்படும் அராஜகம் மோசமாக நீடிப்பதையும் பி.பி.ஸி. தமிழ்ச் சேவை மூலம் ஓரளவுக்கு உலகுக்கு என்னால் அம்பலப்படுத்த முடிந்தது.

நான் பி.பி.ஸி. தமிழ்ச் சேவைப் பணியை நிறுத்திக் கொண்டமையை அடுத்து அந்தப் பொறுப்பை ஏற்ற நண்பர் நிமலராஜன் பின்னர் அந்த உயரிய சேவைக்காக படுகொலையுண்டமை வரலாற்றுத் துன்பியல் நிகழ்வு.

இதற்கிடையில் –

மீண்டும் துளிர்த்த சிவில் நிர்வாகம் திடீரென முடங்கிப் போனமை கண்டு இராணுவமும் அரசும் கொதித்துப் போயின. ஒரே நாளில் யாழ் நகரில் இருந்த வங்கிகளின் முகாமையாளர்கள், பெரிய வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் எல்லோரையும் நகரிலிருந்து சுருட்டி அள்ளிக் கொண்டு பலாலிப் படைத் தளத்துக்குக் கொண்டு சென்றது இராணுவம். ஏன் வங்கிகளைப் பூட்டினீர்கள், கடைகளை அடைத்தீர்கள் என அவர்களை நோண்டி எடுத்தனர் படை அதிகாரிகள். அவர்கள் எல்லோரிடமும் ஒரே பதில்தான் இருந்தது. 'செல்லும் செல்லாது எல்லாம் செட்டியார் தலை மீது' என்பது போல, 'உதயன் செய்தி வெளியிட்டது கடைகளை அடைத்து கால வரையறை இல்லாமல் பகிஷ்கரிக்கும்படி. அதனால் பூட்டினோம்' என்றனர் அவர்கள்.

அடுத்தது என்ன? உதயன் மீது இராணுவத்தின் கோபம் திரும்பியது. யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் செயற்பட்ட 512 ஆவது பிரிகேட் தலைமையகம், அச்செழுவிலிருந்து 51 ஆவது டிவிசனின் தலைமையகம், பலாலி படைத்தளம் என பல இடங்களுக்கும் மாறி மாறி அழைக்கப்பட்டேன்.

51ஆவது டிவிசனின் ஜி.ஓ.ஸி. (General Officer Commanding) ஜெனரல் ஜானக பெரேரா மிகக் கீழ்த்தரமாக என்னை நடத்தினார். காணாமல் போகும் இளைஞர்களின் கதை எனக்கும் நேரும் என்பதைக் கொச்சை மொழியில் முகத்துக்கு நேரே திட்டி மிரட்டினார். மிகக் கேவலமாக நடத்தினார். இப்போதும் துணிச்சலுடன் கூறுகிறேன். அச்சமயத்தில் நான் கலங்கவில்லை. உறுதியாக இருந்தேன். அன்றைய காலகட்டத்தில் என்னில் கைவைப்பது படைத்தரப்புக்கு மிக மோசமான விளைவுகளைத் தரும் என்பது எனக்கு தெரியும். உலகம் முழுவதும் இருக்கும் ஊடகங்களுக்கு அந்த காலகட்டத்தில் – இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய வேளையில் – யாழ்ப்பாணத்திலிருந்த ஒரே செய்தி மூல மையம் உதயன்தான். அன்றைய நிலையில் உதயனின் மூளைமையம் நான்தான். அந்த காலகட்டத்தில் நான் துணிச்சலாக இருக்க வேண்டும் என்பதில் மிக உறுதியாக இருந்தேன். அந்த உறுதியை இப்போது நினைத்துப் பார்த்தாலும் ஆச்சரியமாக இருக்கின்றது.

51 ஆவது டிவிசன் தலைமையகத்திற்கு என்னை அழைத்து மோசமாக திட்டி, அச்சுறுத்தி, கேவலமாக நடத்தி, அங்கிருந்த விரட்டாத குறையாக என்னை ஜெனரல் ஜானக பெரேரா கலைத்த போதும் கூட நான் சிரித்துக் கொண்டுதான் வெளியே வந்தேன். நடந்தவற்றை என் நிர்வாக இயக்குநருக்கு மட்டுமே மேலோட்டமாக கூறிவிட்டு அடங்கி விட்டேன். மற்றவர்களுடன் அவற்றைப் பகிர்வது பத்திரிகை அலுவலகத்திற்குள் வீண் பயத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி, அதை முடக்கி விடும் என்பதால்.

ஜானக பெரேராவின் திட்டலிலிருந்து நான் ஒரு விடயத்தை புரிந்து கொண்டேன். குடாநாட்டில் இளைஞர்கள், பொது மக்கள் காணாமலாக்கப்படுவதால் எழுந்துள்ள உணர்வலைகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் அதிகம் பாதித்துள்ளது, அவரது கோபம்தான் ஜெனரல் ஜானக பெரேரா மூலம் என் மீது பிரதிபலிக்கின்றது, சந்திரிகாவின் கோபம் இவற்றை அம்பலப் படுத்தும் ஊடகம் மீது அல்ல, இவற்றுக்குக் காரணமான இராணுவம் மீது, இராணு வத்தின் அதிகாரிகள் மீது என்பது எனக்கு புரிந்தது.

ஆகவே எனது உயிருக்கு உலை வைக்கும் முயற்சி இராணுவ அதிகாரிகளுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது புரிய தொடங்கியதும் என் பேனாவின் துணிச்சலும் ஓங்க தொடங்கியது.

இதே ஜானக பெரேரா பின்னர் ஓய்வு பெற்று, இராணுவத்தை விட்டு வெளியேறி, இதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தரப்புக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியில் அரசியல் களத்தில் இறங்கினார் என்பதும் கவனிக்கத்தக்கது. (10ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

## கொடியேற்றத்துடன் ஆரம்பமானது நல்லூர் கந்தன் பெருந்திருவிழா

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே உட்பிரகாரத்தில் மாத்திரம், திருவிழா பூஜைகள் இடம்பெறுகின்றன.

இதன்போது நல்லூர் முன்பாக பருத்தித்துறை வீதியில் பக்தர்கள் ஒன்றுகூடி நல்லூர்க் கந்தனை தரிசித்தனர்.

## நூல் வெளியீட்டு நிகழ்வு




கலாபூஷணம் ஓவியர், எஸ்.டி.சாமி எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு புரவலரின் இல்லத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்ற போது நூலின் முதற் பிரதியை புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதா மேத்தாவிடமிருந்து இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் பெறுகின்றமையோடு அருகில் நூலாசிரியர் எஸ்.டி.சாமியும் உடன் காணப்படுகிறார்.

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தென்மராட்சி மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள் கிரியா ஜோதி சிவஸ்ரீ ந. மகேஸ்வரக்குருக்கள் அவர்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது.

## சிறகுகள் ஆசிரியர்களுக்கு இணையவழி பயிற்சி நெறி

சிறகுகள் அமையத்தின் ஆசிரியர்களுக்கான இணையவழி கற்பித்தல் நடவடிக்கையை வலுப்படுத்தும் வகையிலான பயிற்சி நெறியின் 8 ஆவது அமர்வு இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.

ஆசிரியர்கள், கற்பித்தல் செயற்பாட்டின் போது சிமாட் போட் (திறன் பலகை) மற்றும் ஈகிளாஸ் மென்பொருளினை வினைத்திறனாக பயன்படுத்துதல் எனும் தலைப்பில் இடம்பெறும் சூம் தொடர்பு: 84004985992

## நூலக நிறுவன கலந்துரையாடல்

நூலக நிறுவனத்தின் 12 ஆவது இணையவழிக் கலந்துரையாடல் 'ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவனச் சேகரங்களை ஆவணப்படுத்தல்' எனும் தலைப்பில் இன்று (சனிக்கிழமை) மாலை 7.30 மணிக்கு இடம்பெறும்.

நூலக ஆளுகைச்சபை உறுப்பினர் சுஜீவன் தர்மரத்தினத்தின் ஒருங்கிணைப்பில் இடம்பெறும் நிகழ்வில் ஈவ்லின் இரத்தினம் நிறுவனம் - சில பின்புலத் தகவல்கள் எனும் தலைப்பில் பேராசிரியர் கா. இந்திரபாலாவும், ஈவ்லின் இரத்தினம் நூலகமும் அதன் சேகரிப்பின் வரலாற்றுப் பின்னணியும் எனும் தலைப்பில் நூலகவியலாளர் ந. செல்வராஜாவும் உரையாற்றவுள்ளனர்.

சூம் செயலி மூலமாக இணையத் தொடர்பு :- 81415584070



# நல்லூர் ஆலயத்திற்கு வருவதை தவிருங்கள்!

## லலித் லியனகே தெரிவிப்பு

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நல்லூர் ஆலயத்திற்குள் வருவதற்கு அனுமதி கிடையாது. ஆகையினால் மக்கள் ஆலயத்திற்கு வருகை தருவதனை தவிர்த்துக்கொள்ளுங்கள் என யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லியனகே தெரிவித்துள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் லலித்லியனகே மேலும் கூறியுள்ளதாவது, 'கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ளமையினால், ஆலயங்களில் திருவிழாக்கள் நடாத்துவது தொடர்பாக சுகாதார அமைச்சினால் சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

குறித்த சுற்றுநிருபங்களுக்கு அமைவாக யாழ்ப்பாண மாநகரசபை, ஆலய நிர்வாகம் மற்றும் பொலிஸார் இணைந்து ஆலய உற்சவத்தினை பாதுகாப்பாக எவ்வாறு நடாத்துவது என்பது தொடர்பில் கலந்தாலோசித்து, சில தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

குறித்த தீர்மானத்துக்கமைய நல்லூர் ஆலய வளாகத்திற்குள் ஆலய நிர்வாகத்தினரால் அடையாள அட்டை வழங்கப்பட்டோர் மாத்திரம் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். வேறு எவரும் ஆலய வளாகத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஆகவே பொதுமக்கள் தற்போதுள்ள தொற்று நிலைமையினை கருத்திற்கொண்டு, ஆலயத்துக்கு வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

மேலும் வீடுகளில் இருந்தவாறு நேரடியாக ஒளிபரப்பப்படும் ஆலய உற்சவத்தை தரிசியுங்கள்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய பெருந்திருவிழாவை நடத்த முடியாத நிலைமை



யாழ்ப்பாணம்,ஓக.04

ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த ஆவணி மகோற்சவத்தை இம்முறை நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பெருந்தொற்றைக் கருத்தில்கொண்டு சுகாதாரத்துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க மகோற்சவம் நிறுத்தப்பட்டுள்ளது என பரிபாலன சபை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான ஆவணி மகோற்சவம் இன்று 14 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நல்லூர்
## கொடி கட்டும் நிகழ்வு

*நல்லூர் வரவேற்பு வளைவில் நல்லூர் ஆலய உற்சவம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையை அடையாளப் படுத்தும் முகமாக சம்பிரதாயபூர்வமாக கொடி கட்டும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு இடம்பெற்றது.*

*நல்லூர் ஆலய அறங்காவலர் சபையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற கொடி கட்டும் நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர், யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.*

*நல்லூர் ஆலயத்தை அடையாளப்படுத்தும் வகையில் செம்மணி பிரதான வீதியில் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் முயற்சியால் 80 லட்சம் ரூபா நிதியில் நல்லூர் ஆலய நிர்வாகத்தினரால் வரவேற்பு வளைவு அமைக்கப்பட்டு, இந்த வருடம் தைப்பொங்கல் தினத்தன்று வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

## சிறுமி ஹிஷாலினியின் உடல் பெற்றோரிடம் மீளக் கையளிப்பு

அண்மையில் 2 ஆவது மரண பரிசோதனைக்காக தோண்டி எடுக்கப்பட்ட சிறுமி ஹிஷாலினியின் சடலம், அவரது பெற்றோரிடம் மீளக் கையளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த மலையகச் சிறுமியின் உயிரிழப்பு தொடர்பாக தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் சிறுமி ஹிஷாலியினின் சரீரத்தை மீளத் தோண்டி, 2 ஆவது மரண பரிசோதனையை மேற்கொள்ளுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

குறித்த நீதிமன்ற உத்தரவுக்கமைய சிறுமியின் சரீரம் தோண்டி எடுக்கப்பட்டு, பேராதனை வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இதன்போது கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் நீதிமன்ற வைத்தியத்துறை தொடர்பான பேராசிரியர் ஜின் பெரேரா தலைமையிலான குழுவே, சிறுமியின் சரீரத்தை மரண பரிசோதனைக்கு உட்படுத்தி இருந்தது.

இந்நிலையில் 2ஆம் பரிசோதனை நிறைவடைந்துள்ள நிலையில், ஹிஷாலினியின் சரீரம் நேற்று (வெள்ளிக்கிழமை) பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

# மட்டக்களப்பு காத்தான்குடியில் கஞ்சா வியாபாரிகள் இருவர் கைது

மட்டக்களப்பு, காத்தான்குடியில் சிறைத் தண்டனை பெற்ற பிரல கஞ்சா வியாபாரியின் வீட்டை கடந்த வியாழக்கிழமை இரவு சோதனை நடத்திய போது அங்கிருந்து 2 கிலோ 20 கிராம் கேரள கஞ்சாவுடன் கஞ்சா வியாபாரி உட்பட இருவரை கைது செய்துள்ளோம் என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.கே. பண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.கே. பண்டார தலைமையிலான பொலிஸார் இராணுவ புலனாய்வு பிரிவினர் சம்பவ தினமான வியாழன் 10 மணி அளவில் காத்தான்குடி பீச் வீதியிலுள்ள வீடு ஒன்றை முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு ஓட்டோவில் மறைத்து வைத்திருந்த 2 கிலோ 20 கிராம் கேரள கஞ்சாவை மீட்டமையுடன் கஞ்சா வியாபாரியுடன் 46 வயதுடையவர் ஒருவர் உட்பட இருவரை கைது செய்தமையுடன் ஓட்டோவையும் மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்ட பிரதான சூத்திரதாரியான கஞ்சாவியாபாரி மிக நீண்டகால போதைப்பொருள் வியாபாரியும் எனவும் போதைப்பொருள் விற்பனைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்தவருமான காத்தான்குடியைச் சேர்ந்த 57 வயதுடையவர் எனவும், இவர் ஓட்டமாவடி, வாழைச்சேனை தொடக்கம் ஏறாவூர், காத்தான்குடி வரை கேரளா கஞ்சா மற்றும் போதைப்பொருள் ஏகவிநியோகஸ்தராகச் செயற்பட்டு வந்துள்ளார் எனவும் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவர்கள் இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!

**1. கேள்வி:-**

இப்போதெல்லாம் அடிக்கடி தற்கொலைச் செய்திகளாய் வந்து கொண்டிருக்கின்றனவே. அப்படித் தற்கொலை செய்ய நினைக்கிறவர்களுக்கு நீங்கள் ஏதேனும் புத்தி சொல்லக் கூடாதா?

**பதில் :-**

கடவுளே! அதைவிட வேற என்ன வேலை எனக்கு. தனது உயிரை மாய்க்கும் அளவுக்கு ஒருவனோ, ஒருத்தியோ துணிகிறார்கள் என்றால் வாழ்க்கையில் தாங்கமுடியாத துன்பம் எதையோ அவர்கள் சந்தித்திருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். அதனால்த்தான்



அவர்களுக்கு வாழ்க்கையைவிட மரணம் இலகுவாய்த் தோன்றியிருக்கிறது. காதல் தோல்வி, பரீட்சைத் தோல்வி, வறுமை என பல காரணங்கள் அவர்களுக்கு அத்துன்பத்தை உண்டாக்கிக் கொடுத்திருக்கலாம்.

இந்தத் துன்பங்கள் இங்குள்ளவர்களுக்கு மட்டும் தான் வருகிறது என்றில்லை. முன்னைக் காலங்களில் வாழ்ந்தவர்களுக்கும் இத்தகைய துன்பம் வரத்தான் செய்தது. ஆனால் அப்போதெல்லாம் இத்தகைய தற்கொலை முடிவை, ஓரிருவரைத் தவிர பலரும் எடுப்பதில்லை. இன்றோ, சர்வசாதாரணமாகத் தற்கொலை முடிவுக்குப் பலரும் வந்துவிடுகிறார்கள். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

குடும்ப உறுப்பினர்களின் அளவு அப்பொழுது அதிகமாக இருந்தது. தாய், தந்தையரைத் தவிர அண்ணன், தம்பி, அக்கா, தங்கை என வீட்டின் உறுப்பினர்கள் பலராய் இருந்தார்கள். அதைவிடவும் உறவுகள் எல்லாம் ஒரே ஊரில் ஒன்றாய் இருந்த காரணத்தாலும், அவ் உறவுகள் உண்மையாய் இருந்த காரணத்தாலும் தம் உணர்வுகளை நம்பிப் பகிர்ந்துகொள்ளக் கூடிய வாய்ப்பு அப்போதையவர்களுக்கு இருந்தது. இன்று நாகரிகம் என்ற பெயரில் வீட்டுக்கொரு பிள்ளை அல்லது இரண்டு பிள்ளை என குடும்ப அளவைச் சுருக்கிவிட்டோம். உறவுகளை விட்டுப் பிரிந்து வாழும் நிலைமையும், உரிமையோடு பழகும் உறவுகள் இல்லாத நிலைமையும் இன்று அதிகரித்து விட்டது. எந்தப் பிள்ளையைப் பார்த்தாலும் ‘செல்போன்’ தான் இன்று அவர்களின் உறவாய் இருக்கிறது. அதனால் உறவுகளுடன் கலந்து பழகும் தன்மையை நம் பிள்ளைகள் இழந்துவிட்டார்கள். சந்தோசமாய் இருக்கையில் ‘செல்போனின்’ தொடர்பு போதுமானதாய் இருக்கும். துன்பம் வருகையில் ‘செல்போனோடு’ நாம் துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளமுடியாது. ‘செல்போனால்’ உறவு நெருக்கங்களையும் இழந்துவிடுவதால் அவர்களை நாடியும் நம் துன்பங்களைப் பகிர முடியாது. அதனால்த் தான் பெருந்துன்பம் தாக்கும் போது இன்றைய பிள்ளைகள் இத்தகைய முடிவுக்குப் போய் விடுகிறார்கள்.

இதைத் தவிரவும் கடவுள் வழிபாடு, கடவுள் நம்பிக்கை என்பவையும் இன்று மிகவும் குறைந்து விட்டது. வீட்டில் சுவாமி கும்பிடுதல், கோயிலுக்குத் தவறாமல் போதல், விசேடங்களுக்கு விரதம் இருத்தல் என்பவையெல்லாம் அன்று இருந்த அளவு இன்று இல்லை. அதனால் எமக்கு மேற்பட்டு இருக்கக்கூடிய தெய்வசக்தி ஒன்று எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும் நம்மைக் காக்கும் என்ற நம்பிக்கையும் இன்றைய இளைஞர்களுக்கு இல்லாமல் போய்விடுகிறது. பழைய காலத்தில் அனைவர்க்கும் இந்நம்பிக்கை இருந்ததாலும் அவர்கள் துன்பத்தைத் தாங்கும் சக்தியைப் பெற்றிருந்தார்கள்.

இவையெல்லாம் தான் சிறு துன்பத்திற்கும் தற்கொலை முயற்சிக்குச் செல்லும் எண்ணத்தை நம் இளையோர்க்குத் தூண்டி விடுகிறது. எனவே பிள்ளைகள், மேற்சொன்ன நமது பாரம்பரிய வழக்கங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும். பெற்றோர்களும் பிள்ளைகளுக்கு அப் பழக்கங்களை ஊட்டவேண்டும். நம் பெற்றோர்கள் பலரும் இன்று பிள்ளைகளைப் பொருளாதாரப் போட்டிக்காகவே தயார் செய்கிறார்கள். பண்பாடு, பழக்கவழக்கங்கள் பற்றி அவர்களும் கவலைப்படுவதில்லை. இழப்புக்களைச் சந்தித்த பின்தான் எல்லோரும் வருந்துகிறார்கள்.

நீள எழுதிவிட்டேன். இனி முக்கியமான ஒன்றைச் சொல்லப் போகிறேன். இந்தச் செய்தி தற்கொலை முடிவுக்கு வந்துவிட்ட ஒருவருக்கு நான் சொல்லும் செய்தி. தற்கொலை செய்வது என்று முடிவெடுத்துவிட்டீர்களா? நல்லது. தாராளமாய் நீங்கள் தற்கொலை செய்யலாம். அதற்கு முன் நான் சொல்லுகிற ஒரே ஒரு புத்திமதியை மட்டும் ஏற்றுக் கொள்ளுங்கள். அதற்குப் பிறகு நீங்கள் தாராளமாக உங்கள் முடிவின்படி நடக்கலாம். அதென்ன புத்திமதி என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன். சாவது என்று முடிவெடுத்த பின்பு அந்த முடிவை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு மூன்று மாத கால அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள். இன்றைக்குச் செத்தால் என்ன மூன்று மாதம் கழித்துச் செத்தாலென்ன? எல்லாம் ஒன்றுதானே.

எனவே இந்த ஒரு முடிவை மட்டும் நீங்கள் தீர்மானமாய் எடுத்துக் கொள்ளுங்கள். சாவை மூன்று மாதங்கள் தள்ளிப் போடுவதால் அப்படி என்ன நடந்து விடப் போகிறது என்கிறீர்களா? சொல்கிறேன். காலம் என்பது நமக்கு அனுபவங்களைக் கற்பிப்பதற்காய் ஆண்டவனால் தரப்பட்டிருக்கும் ஆசிரியன். அக் கால ஆசிரியன் நம் வாழ்வில் ஒவ்வொரு நிமிடத்திலும் ஏதோ ஓர் அனுபவத்தைக் கற்றுத் தந்துகொண்டேயிருக்கிறான். நீங்கள் சாவதற்கு எடுத்துக் கொள்ளும் மூன்று மாதகால அவகாசத்திற்குள் அக்கால ஆசிரியன் தனது அனுபவக் கற்பித்தலினால் உங்கள் புத்தியில் எத்தனையோ மாற்றத்தை ஏற்படுத்திவிடுவான். அதனால் துன்பத்தை எதிர்கொள்ளும் பலம் உங்களுக்கு வந்துவிடும். நீங்களே, சாகும் முடிவுக்கு நானா வந்தேன் என்று சிலவேளை ஆச்சரியப்படுவீர்கள். இன்னும் சில காலம் போன பிறகு, காலம் செய்து வரும் வசதிகளால் இப்படி ஒரு முடிவை நான் எடுத்திருந்தால் என்னாகியிருப்பேன் என்று உங்களுக்கே நகைப்புத் தோன்றும்.

இதையும் ஏற்க மறுத்து உடனே சாகப் போகிறீர்களா? தயவு செய்து அதற்கு முன் உங்கள் வீட்டிற்குள்ளேயோ அல்லது உறவுக்குள்ளேயோ இருக்கக்கூடிய ஒரு நிதானமானவரை அல்லது உங்களுடன் எந்தத் தொடர்பும் இல்லாதிருந்தாலும் எல்லோராலும் மதிக்கப்படுகிற ஓர் அறிஞரைச் சந்தியுங்கள். உங்கள் துன்பங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். கடவுள் இயற்கையில் சில அதிசயங்களைப் படைத்திருக்கிறான். இன்பம் மற்றவர்களோடு பகிரப் பகிர அதிகரிக்கும். துன்பம் மற்றவர்களோடு பகிரப் பகிர குறைவடையும். இது எல்லோர்க்கும் பொதுவானது. நிதானமானவர்களுடன் உங்கள் துன்பத்தைப் பகிர்ந்தால் இயற்கையாகவே உங்கள் துன்பம் குறைந்து தற்கொலை முடிவில் மாற்றத்தை ஏற்படுத்தும். அதுமட்டுமல்லாமல் அப்பெரியவர்கள் சொல்லுகிற புத்திமதிகள் உங்களைப் பலப்படுத்தியும் அம்முடிவை நிராகரிக்கச் செய்யும்.

ஐயா இதெல்லாம் சரி, இவற்றையெல்லாம் செய்து மூன்று மாதம் கழிந்த பின்பும் சாவேன் என்று என் மனம் நினைத்தால் என்ன செய்வது என்கிறீர்களா? தாராளமாகச் செத்துவிட்டுப் போங்கள்!

பிற்குறிப்பு - சமூகத்தில் மிகச் சொற்ப அளவினராய் இருக்கும் தற்கொலையாளர்கள் ஒருசிலருக்காக இவ்வளவு நீண்ட பதில் எழுதவேண்டுமா? என்கிறீர்களா? ஓர் உயிரின் பெறுமதியை நீங்கள் அறிந்தால் அப்படிக் கேட்கமாட்டீர்கள். அதுமட்டுமல்ல, உங்கள் வீட்டில் யாரேனும் ஒருவர்க்கும் இந்தப் புத்திமதி ஏதோ ஒரு நேரத்தில் தேவைப்படலாம். அதை நினைந்து இந்த நீளப் பதிலைச் சகித்துக் கொள்ளுங்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் சாகாமல் இருக்க வழி சொல்கிறாரா? சாகச் சொல்கிறாரா?**

**2. கேள்வி:-**

சுகாதார அதிகாரிகள் கெஞ்சக்கெஞ்ச அதுபற்றி எந்தக் கவலையுமில்லாமல் அரசாங்கம் இருக்கிறதே. அதற்கு இதனால் என்னதான் இலாபம்?

**பதில் :-**

இலாபம் இல்லாமலா? இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு சீனா இலங்கையை ஆக்கிரமிப்பதாயும், அதனுடைய ஆக்கிரமிப்பிற்கு இலங்கை இடம் கொடுப்பதாயும் எழுந்த பெரிய எதிர்ப்புக்கள் எல்லாம் இன்




றைய பரபரப்பில் இல்லாமல் போய்பிட்டதே. இது இலாபம் இல்லையா?

**உலகநாதரின் ஒப்பீனியன் * மரண இலாபம். ஹி..ஹி..**

**3. கேள்வி:-** தூரத்தினூடு பயணம் செய்வது போல, காலத்தினூடும் பயணம் செய்யலாம் எனும் கருத்தை அடிப்படையாய் வைத்து ‘டைம்மெஷின்’ (கால இயந்திரம்) பற்றி பல ஆங்கில சினிமாக்கள் வந்து கொண்டிருக்கின்றன. தமிழிலும் கூட ஓரிரு சினிமாக்கள் அதுபற்றி வந்துவிட்டன. இதெல்லாம் சாத்தியமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**பதில் :-**

சந்தேகத்திற்கு இடமில்லாமல் அது சாத்தியம் தான். நமது அறிவியல் வளர்ச்சி அந்த உண்மையை நோக்கி இப்பொழுதுதான் நகரத் தொடங்கியிருக்கிறது. இது பற்றி எமது புராணங்களிலும் இலக்கியங்களிலும் எப்போதோ செய்திகள் பதிவாகிவிட்டன. பழைய புராண சினிமாக்களில் நாரதர் திருமாலின் முன் தோன்றி பின்னர் திடீரென மறைந்து சிவலோகத்தில் நிற்பதான காட்சிகள் எல்லாம் இந்த ‘டைம் மெஷின்’ பற்றிய விவரணங்கள்தான்.



இதுபற்றி நமது இலக்கண நூல்களும் சில குறிப்புக்களைத் தருகின்றன. நமது இலக்கணக்காரர்கள் தமிழ்ச்சொற்களை பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள் என இரண்டாகப் பிரித்து இருக்கின்றனர். பெயர்ச்சொற்கள் என்பவை ஒரு பொருளைக் குறிக்க வருபவை. அதில் மேலும் விரிவுண்டு. அதை விடுத்து நாம் வினைச்சொற்களுக்கு வருவோம். வினை என்பது செயல். செயலைக் குறிக்கும் சொற்களே வினைச்சொற்களாம். இந்த வினைச்சொற்கள் பற்றி நமது இலக்கண நூல்கள் ஒரு செய்தியை அழுத்திச் சொல்கின்றன. வினைச்சொற்கள் காலம் காட்டும் என்பதே அச்செய்தி. இதிலிருந்தும் செயலுக்கும் காலத்திற்குமான தொடர்பை நாம் தெரிந்துகொள்ளலாம்.

இன்றைய அறிவியல் கணிப்பின்படி வேகம் என்பது தூரத்தின் கீழ் நேரம் என்பதாகத்தான் சொல்லப்படுகிறது. (v=d/t) இதுபற்றி விரிவாய்ச் சொன்னால் உங்களுக்குச் செமையாக ‘போர்’ அடிக்கும். அதனால் முடிந்த அளவு சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்.

(11ஆம் பக்கம் பார்க்க)

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 98

**289. இவற்றிலிருந்து இந்தியாவை பற்றிய உங்கள் கணிப்பு என்ன?**

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தமிழ்த் தலைவர்கள் நிறைவேற்றி, அதற்கு பரந்த ஆதரவை தமிழ் மக்கள் அடுத்து வந்த தேர்தலில் கொடுத்து, தாங்கள் நீதியாக நடத்தப்படாத பட்சத்தில் பிரிந்து செல்லும் வழியைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்பதை சிங்கள – பௌத்த பேரினவாதத்துக்கு எடுத்துக் கூறினார்கள்.

பேரினவாதத்தின் அராஜகத்தை கவனித்த இந்திரா காந்தி, அமிர்தலிங்கத்துடன் தமிழ்த் தலைவராக அந்தத் தீர்மானத்தையும் மதித்து, ஈடுபட்டு எடுத்த முயற்சிகளிலிருந்து பின்னர் அவரது மகன் ராஜீவ் காந்தியால் ஏற்படுத்தப்பட்ட இந்திய ஒப்பந்தம், அதை தொடர்ந்து நடந்தவை, அவற்றில் தமிழ் மக்களின் அரசியல் பற்றி ஓரளவு விரிவாக இல்லாவிட்டாலும் தேவையானவற்றை புரிந்து கொள்ளக் கூடியவாறு எழுதியிருந்தேன்.

இவை வரலாறுகள். அவற்றில் எனது கணிப்பென்பது அந்தக் கடலில் ஒரு துளியே.

எத்தனையோ வித்தியாசமான பார்வைகள், இந்த வரலாறுகளில் பார்க்கப்படலாம். இந்தியப் படைகள் அமைதிப்படையாக வந்தனவா அன்றில் ஆக்கிரமிப்பு படையாக வந்தனவா என்பதை எனக்குள்ளேயே தீர்க்க வேறு சிலரின் கருத்தாக்கங்களை அடுத்து மீளப் பரிசீலித்தேன். இந்தியப் படையினரும் அட்டூழியங்கள் செய்தார்கள் என்பதில் மாற்றுக் கருத்தேயில்லை. அந்த அட்டூழியங்களையும் மனித உரிமை மீறல்களாக பதித்த ரஜனி திரணகமவின் கொலையே அதற்கு தேவையான வரலாற்றின் சாட்சி.

ஆனாலும் எந்த இராணுவமும் இராணுவமே. அவர்கள் ஒரு காரியத்துக்குக் கட்டவிழ்த்து விடப்படும் போது வேட்டை நாய்கள்தான். வித்தியாசம் என்னும் போது பௌத்த, சிங்கள ஏகாதிபத்தியத்தின் இராணுவம் அரசியல்மயப்படுத்தப்பட்டு தமிழ் மக்களின் மேல் தொடர்ச்சியாக ஏவப்பட்டது. இந்திய இராணுவமோ அப்படியாக அரசியல்மயப்படுத்தப்பட்டு தமிழ் மக்களுக்கு எதிராக அனுப்பப்பட்டதாக நான் கருதவில்லை. பின் நடந்த அட்டூழியங்களின் நோக்கத்தை அளவிடுவது தவறு.

ஆனால் எங்களிடையே ஏகோபித்த தலைமை தேடி அவற்றை அரசியலாக்கினோம்.

அரசியலில் நெடுநாள் நண்பர்களும் இல்லை, எதிரிகளும் இல்லை. இந்திரா காந்தியும் இந்திய ஒப்பந்தமும் பின்னர் இந்த விடுதலைப் புலிகளுக்கெதிரான போரில் இந்தியாவின் வகிபாகமும் அதைத் தான் சொன்னது.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொல்லப்படுமுன் ஜனாதிபதி மஹிந்தாவிற்கு "தான் கொல்லப் படுவார் என்றும் கொல்பவர்கள் யாரென்றும் உனக்கு



தெரியும்" எனவும் எழுதினார். ஆயினும் அதே முடிவைத்தான் கண்டார்.

அதே நிலைமை இன்னுமொரு தமிழ் ஊடகவியலாளரான வித்தியாதரனை தேடி வந்தது. விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி மஹிந்தாவினால் தூதுபோகக்



கேட்கப்பட்டவர் அவர். ஆனால் சகோதரர் கோட்டாபயவினால் மேலுலகம் அனுப்பக் கடத்தப்பட்டு தெய்வாதீனமாக உயிர் தப்பினார். அவர் இன்றும் மஹிந்தாவுடன் காப்பி பருகி, ஊடக தர்மத்தில் செய்திகள் பரிமாறுகிறார்.

ஆனால் மஹிந்த சகோதரர்கள் நடத்திய விடுதலைப் புலிகளின் வேட்டையில் அதிகாரத்துக்காக, அவர்களது பந்த பாசங்கள் முன்னின்றவையேயொழிய நட்புகள், பண்புகள் எவையுமே கணக்கெடுக்கப்படவில்லை. தந்திரங்கள் கையாளப்பட்டன. அதில் இந்தியாவும் அடக்கப்பட்டது. அதனை மீறி சர்வதேசம் இல்லை என்பது அவர்களின் கணிப்பில் தமிழ் மக்கள் தங்கள் சிறிய வயதிலேயே படித்த ஒரு நீதிக் கதைதான். உலகத்தை முதலாக சுற்றி வருபவருக்கு மாம்பழம் தருவதாக பார்வதிதேவி சொல்ல முருகன் மயிலேறி வானமெல்லாம் பறந்து வர பிள்ளையார் சிவனையும் பார்வதியையும் சுற்றிவந்து, இதுதான் எனது உலகம் என்று அதனை பெற்றது.

நாங்கள் அறிவிருந்தும் சாத்திரம் சொல்கிற பல்லி கூழ்பானைக்குள் விழுந்த மாதிரி ஓலமிட்டோம். இந்தியா தான் வளர்ந்து வரும் வல்லரசாக, இந்திய கடல் பிராந்தியத்தில் தனது ஆளுமையை நிலைநிறுத்த தனக்குஎதிராகஉருவாகிக்கொண்டிருந்தசிலஅலைகளை மேவிக் கொண்டு போவதற்கான வழிவகைகளைப் பார்த்தது. அதற்காக அமெரிக்காவுடன் கைகோர்த்தது.

தமிழ் மக்களை ஒட்டி அதற்கு கரிசனையும் அக்கறையும் இருந்தாலும் தொப்புள் கொடி உறவாக இந்திய மத்திய அரசு அவர்களைப் பார்க்கவில்லை. தாயும் தனயன் என்றாலும் வாயும் வயிறும் வேறென்று கணித்துதான் நடந்தது.

ஒன்று மாத்திரம் தெளிவாக தெரிந்தது. விடுதலைப் புலிகள், ஆயுதப் பலத்தால் தாம் நடத்தியே காட்டுவோம் என்று உயிர் பலிகளாலும் உயிர் தியாகங்களாலும் உணர்ச்சி ஊட்டி புடமிட்டு வளர்த்த தனித் தமிழ் ஈழம் என்ற கொள்கைபாட்டில் அவர்களோடு அரசியல் பேச இந்தியா தயாராக இருக்கவில்லை. இந்தியா திம்புவில் மிகத் தெளிவாக மாற்றான ஓர் அமைப்பையே அரசியல் தீர்வாக ஒரு வல்லரசாக அது வரைந்தது. அதற்கு எதிரான ஒரு வளர்ச்சியை இந்தியா ஆதரித்து ஏற்க விரும்பவில்லை. அதை கிள்ளிவிட கணக்கெடுத்திருந்தனர். ராஜபக்ஷக்கள் போருக்கும், விடுதலைப் புலிகளின் அழிவிற்கும் வகிபாகம் இந்தியாவே என்று தந்திரமாக கூழை கும்பிடு போட்டார்கள். தமிழ் மக்கள் எதுக்கும் தங்கள் முகங்களை கூட கழுவுவதற்கு விரும்பவில்லை.

இவைகளிலிருந்து தமிழ் மக்கள் தங்களுக்கான பாதைகளை இனியாவது வகுத்துக் கொள்ளவேண்டும்.

**290. நீங்கள் இணைந்திருந்த தூதுக்குழு என்ன பரிந்துரைகள் செய்தது?**

அவற்றை மூன்று கட்டங்களாக பிரிந்திருந்தோம். ஒன்றில் ஒன்று அவை தங்கியிருந்தன.

ஒவ்வொன்றும் கடைப்பிடிக்கப்படும் விதத்தில் நம்பிக்கையூட்டுவனவாகவும் இருக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. உடனடியாக செய்யப்பட வேண்டியவையாக:

அரசாங்கத்திடமிருந்து நன்றாக போர் பகுதி மக்களிடையே பிரசித்தம் செய்யப்பட்ட போர் நிறுத்தம் என்ற அறிவித்தல் வேண்டும். இதை விடுதலைப் புலிகளும் ஏற்று அனுசரிக்க வேண்டும்.

பொதுமக்களை உயிர்சேதங்களிலிருந்தும், சொத்து அழிவிலிருந்தும் பாதுகாக்கும் கடப்பாடு அரசாங்கம் விடுதலைப் புலிகள் இருவருக்குமே உண்டு. ஆதலால் அவரச மனிதாபிமான நடப்புக்களுக்காக, அரசாங்கம் போர்முனையில் ஒரு வழியை வெளியேற விரும்பும் மக்களுக்காக திறப்பதற்கு முன்வரவேண்டும். (A humanitarian Corridor)

அப்படியாக ஏற்படுத்தப்படும் வழியில் மக்கள் நம்பிக்கை வைத்து வெளியேறி வர அவை செஞ்சிலுவைச் சர்வதேச குழுவிடமோ அல்லது அது போன்ற ஐ.நா. அமைப்பிடம் கையளிக்கப்பட வேண்டும்.

வெளியேற விரும்பும் மக்களை தடுக்காது அவர்களை வெளியேற விடுதல் வேண்டும்.

போரில் ஈடுபட்டு இருக்கும் இரு பகுதியினரும் இணைந்து மக்கள் எதிர்நோக்கியுள்ள மனிதாபிமானமற்ற செயல்களை தவிர்க்க வேண்டும்.





யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உணவு, தண்ணீர், மருந்து வகைகள் தொடர்ச்சியாக செல்வதற்கு ஐ.நாவின் அமைப்புகளை பயன்படுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பு சோதனைகளுக்காக, அமைக்கப்பட்ட நிலையங்களுக்கு வரும்போது அவர்கள் மிக விரைவாக செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் உதவிகளோடு நடத்தி பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

எல்லா இடம்பெயர்ந்த மக்களின் எல்லா முகாம்களும் சிவில் சேவை உத்தியோகத்தர்களிடம் பாரப்படுத்தப்பட்டு அவற்றிற்கு செஞ்சிலுவைச் சங்க அங்கத்தினர் களும் ஐ.நாவின் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பராமரிப்பு உதவிகளுக்கு இணைக்கப்படவேண்டும். அது முஸ்லிம் மக்களையும் உள்ளடக்கி வடபகுதியிலும் மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்தும் வெளியேற்றப்பட்டவர்களையும் மீள்குடியேற்றம் செய்தல் வேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயங்களை அடுத்து ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்கி அவற்றில் முன்னிருந்த மக்கள் அங்கு தமது வாழ்வாதாரங்களுக்கான தொழில்களை செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்.

மீள் குடியேற்ற வசதிகளுக்காக, கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு, பாதைகள் சீராக்கப்பட்டு மக்கள் போக்குவரத்துக்கு வசதிகள் செய்யப்பட வேண்டும்.

(வளரும்.........)

இந்தவாரம் இவர்

ஆக்கம் - ப்ரியமதா பயஸ்



# கறுப்பின மக்களுக்காக அமெரிக்காவில் குரல் கொடுத்த

# மார்டின் லூதர் கிங்

கறுப்பின மக்களுக்காக அமெரிக்காவில் குரல் கொடுத்தவர் மார்டின் லூதர் கிங். அவருக்கு இணையாக உச்சரிக்கப்பட வேண்டிய பெயர் ரோசா பார்க்ஸ். பேருந்தை விட்டு கறுப்பர் என்று சொல்லி எழுப்ப நடத்துனர் முயன்ற பொழுது எழ மறுத்து கம்பீரமாக அவர் உட்கார்ந்து இருந்தமை மிகப்பெரிய போராட்டமாக வெடித்தது.

அமைதி வழியில் மார்ட்டின் லூதர் கிங் தலைமையில் கறுப்பின மக்கள் பேருந்துகளை புறக்கணித்தார்கள். உரிமைகள் மீட்கப்பட்டன. எனக்கு நாற்பத்தி இரண்டு வயது தான். நான் களைப்பாக இல்லை. முதுமை என்னை அழுத்தவில்லை. ஆனால், எழுந்து, எழுந்து அடக்குமுறைக்கு பயந்து பயந்து களைப்படைந்து விட்டோம் நாங்கள். அதனால் எழ மறுத்தேன். என்று சொன்ன அவரை 'விடுதலைப் போரின் தாய்' என்று அமெரிக்கா நினைவு கூர்கிறது.

1929 ஆம் ஆண்டு, ஜனவரிமாதம் 15 ஆம் திகதி பிறந்த அந்தக் குழந்தைக்கு ஆரம்பத்தில் வைக்கப்பட்ட பெயர் மைக்கேல் லூதர் கிங். புரட்டஸ்லாந்து புரட்சியாளர் மார்ட்டின் லூதர் கிங்கின் மேல் கொண்ட பற்றின் காரணமாக அந்தக் குழந்தையின் தந்தை மார்ட்டின் லூதர் கிங் என்ற பெயரைப் பிற்பாடு தனது பிள்ளைக்கு வைத்தார். முன்னவருடன் வேறுபடுத்தி அடையாளம் காண்பதற்காக மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் என்று பின்னாளில் அழைக்கப்பட்டது அந்தக் குழந்தை.

தனது தந்தை பாதிரியாராக இருந்த திருச்சபையிலேயே கிங்கும் 1947இல் சேர்ந்தார். இந்தத் திருச்சபையில்தான் சில ஆண்டுகள் கழித்து அவர் இவ்வாறு முழங்கினார்

'அமெரிக்காவே, நீ இலக்கற்றுப் போய்விட்டாய். உனது சகோதரர்கள் 1.9 கோடிப் பேரை மிதித்துவிட்டுச் சென்றுகொண்டிருக்கிறாய். ஏதோ சில மனிதர்கள் மட்டும், ஏதோ சில வெள்ளையர்கள் மட்டுமல்ல, எல்லா மனிதர்களும் சமமாகவே படைக்கப்பட்டிருக்கிறார்கள். எழுந்திரு அமெரிக்கா, உனது இலக்குக்குத் திரும்பிவா' என அவர் முழக்கமிட்டார்.

கிங், கறுப்பின மக்களுக்காகப் போராடியவர் என்றாலும், அவரது இறுதி இலக்கு, சகோதரத்துவம், சமத்துவம், சமாதானம் ஆகியவை நிறைந்த உலகு தான். அந்த உலகில் கறுப்பினத்தவர்கள் இருப்பார்கள், வெள்ளையினத்தவர்கள் இருப்பார்கள். ஆனால், பாகுபாடுகள் என்பது இருக்காது. போர் இருக்காது. அன்பின் வெளிச்சத்தில் ஒவ்வொருநாளும் விடியும்.

அவர் போராட்டக் களத்தில் இறங்கிய காலகட்டத்தில் தான் ஆபிரிக்க நாடுகள் பலவும் ஏகாதிபத்தியத் தலைகளிலிருந்து விடுபட்டுக்கொண்டிருந்தன. ஏகாதிபத்திய தலைகளிலிருந்து விடுபட்டாலும் இனவெறி நீடிக்கத்தான் செய்தது. அந்த நேரத்தில் கிங்கின் பிரவேசமும் ஆளுமையும் மற்ற நாட்டுக் கறுப்பினத்தவரையும் வசீகரித்தன.

அகிம்சைக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட கிங் வெள்ளையின வெறியாளர்களுக்கும் கறுப்பினத் தீவிர நிலையாளர்களுக்கும் நடுவே அகப்பட்டுக்கொண்டார்.

1968 ஆம் ஆண்டு, ஏப்ரல் 4 ஆம் திகதி அவர் சுட்டுக் கொல்லப்படுவதற்குச் சில நாள்கள் முன்பு மக்கள் திரளிடையே அவர் உரையாற்றியபோது இப்படிச் சொன்னார்-

கலவரங்களில் ஈடுபடுவதற்கும் கோழைத்தனமான அடிபணிதலுக்கும் மாற்றாக ஒரு வழிமுறை நமக்குத் தேவை. அகிம்சைதான் நமது வலுவான ஆயுதம்.

1966 காலகட்டத்தில் மிஸ்ஸிஸிப்பி மாகாணத்தில் நடந்த உரிமைப் போராட்டங்களுக்கும் வடக்குப் பகுதி நகரங்களில் நடந்த இனக் கலவரங்களுக்கும் பிறகு, சில கறுப்பினக் குழுக்கள் 'கறுப்பர்கள் அதிகாரம்' என்ற முழக்கத்தை முன்வைத்தன. ஆனால், கிங் அதை மறுத்தார்.

கறுப்பினத்தவர் தங்கள் அச்சங்களிலிருந்து விடுபட வெள்ளையினத்தவரின் உதவி தேவை. அதேபோல் வெள்ளையினத்தவர் தமது குற்றவுணர்விலிருந்து விடுபட கறுப்பினத்தவரின் உதவி தேவை. கறுப்பர் ஆதிபத்தியம் என்ற கொள்கை வெள்ளை ஆதிபத்தியத்தைப் போன்றே தீங்கானது. என்றார்.

அவரது நம்பிக்கையின் அடிநாதமாக இருந்தது மனிதர்களின் நற்குணத்தின் மீது அவர் கொண்ட ஆழமான நம்பிக்கைதான். 1963இல் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட கறுப்பின மக்கள் வொஷிங்டனில் அணிவகுத்தபோது கிங் ஆற்றிய உரையைத் தொலைக்காட்சியில் பார்த்த கோடிக்கணக்கான அமெரிக்கர்கள் - வெள்ளையர் உட்பட - மிகவும் நெகிழ்ந்துபோனார்கள்.





எனக்கொரு கனவு இருக்கிறது எனது நான்கு குட்டிக் குழந்தைகளும் தோல் நிறத்தால் அல்லாமல் அவர்களுடைய குணத்தால் மட்டுமே மதிப்பிடப்படக்கூடிய ஒரு தேசத்தில் வாழ்வார்கள் என்று எனக்கொரு கனவு இருக்கிறது. இந்த நம்பிக்கையோடு, நமது தேசத்தில் அபஸ்வரமாக ஒலிக்கும் ஓசையையெல்லாம் சகோதரத்துவத்தின் இனிய 'சிம்ஃபொனி'யாக நம்மால் மாற்ற முடியும். இந்த நம்பிக்கையோடு, ஒருநாள் நாமெல்லாம் சுதந்திரமானவர்களாக ஆவோம் என்ற உணர்வோடு, நாமெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து உழைக்கவும், ஒன்றாகப் பிரார்த்திக்கவும், ஒன்றாகப் போராடவும், ஒன்றாகச் சிறை செல்லவும், சுதந்திரத்துக்காக ஒன்றாகத் தோள் கொடுக்கவும் முடியும். என்றார் .

1964, டிசெம்பர் 10 அன்று சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்றுக்கொள்ளும்போது கிங்கின் ஏற்புரை உலகம் என்றுமே நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய ஒன்று.

இனவெறி, போர் ஆகியவற்றின் விண்மீன்களற்ற நள்ளிரவுதான் துரதிர்ஷ்டவசமாக மனிதனுக்கு விதிக்கப்பட்டது என்றும் சமாதானத்தின், சகோதரத்துவத்தின் விடியல் என்பது ஒருபோதும் வரவே வராது என்றும் சொல்வதையெல்லாம் என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியாது.

நிராயுதபாணியான உண்மை, நிபந்தனையற்ற அன்பு ஆகியவற்றின்படிதான் வாழ்க்கை அமையும் என்று நான் நம்புகிறேன். தற்காலிகமாகத் தோற்கடிக்கப்படும் நியாயம், தீமையான வெற்றியை விட உறுதியானது என்று நான் நம்புவது இதனால்தான்.

வெவ்வேறு வகை மக்களிடம் வெவ்வேறு விதத்தில் அவர் பேசினார். அமெரிக்க வெள்ளையின மிதவாதிகளிடம் பேசிய விதம், வெள்ளையின வெறியாளர்களிடம் பேசிய விதம், உலக மக்களிடம் பேசிய விதம், தனது இனத்துப் புரட்சிகர இளைஞர்களிடம் பேசிய விதம், படிப்பறிவற்ற ஏழை எளிய கறுப்பின மக்களிடம் பேசிய விதம் ஒவ்வொன்றும் தனித்துவம் மிக்கவை.

என்றாவது ஒருநாள், தான் கொல்லப்படுவேன் என்று அவருக்குத் தெரியும். தன் படுகொலையைப் பற்றி முன்கூட்டியே அவர் இப்படிச் சொல்கிறார்:-

என்னுடைய வெள்ளையினச் சகோதர, சகோதரிகளை ஆன்மரீதியிலான மரணத்திலிருந்து காப்பாற்றுவதற்கு என்னுடைய உடல்ரீதியிலான மரணம்தான் விலையென்றால், அதைவிட வேறு எந்த வித மீட்சியும் சிறப்பாக இருக்காது. என்று தனவாய் மொழி நல்கினார்.

மார்ட்டின் லூதர் கிங்கினுடைய போராட்டத்தின் பலனாக 1965ஆம் ஆண்டு கறுப்பினத்தவர்களுக்கு வாக்குரிமை அளித்தது அமெரிக்க அரசாங்கம். அதனைத் தொடர்ந்து கறுப்பினத்தவர்களும், வெள்ளையினத்தவர்களும் சமம் என்பதைப் பிரகடனப்படுத்தும் மனித உரிமைச் சட்டத்தை அமெரிக்கா நிறைவேற்றியது. கறுப்பினத்தவர்களுக்குச் சம உரிமை பெற்றுத்தரும் இயக்கத்தில் கறுப்பினத்தவர்கள் மட்டுமே இடம்பெற்றால் பலன் இருக்காது என்று நம்பிய மார்ட்டின் லூதர் கிங் மற்ற இனத்தவரையும் தனது இயக்கத்தில் சேர்த்துக்கொண்டார். அனைவருடைய மனங்களும் மாறினால்தான் சம உரிமைக்கு வாய்ப்பு உண்டு என்று அவர் நம்பினார். இது குறித்து இன ஒதுக்கல் ஆதரவாளர்கள் ஆத்திரம் அடைந்தனர்.

டென்னசியில் 1968ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் நாள் மாலை சொற்பொழிவிற்காக ஒரு விடுதியில் தங்கியிருந்தபொழுது ஒரு வெள்ளையினத் தீவிரவாதி லூதர் கிங்கை துப்பாக்கியால் சுட்டான். அந்த இடத்திலேயே அவர் உயிர் பிரிந்தது அப்போது அவருக்கு வயது 39. மார்ட்டின் லூதர் கிங்கின் மறைவிற்கு உலகமே கண்ணீர் அஞ்சலி செலுத்தியது.

# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BIDS

## Supply of Skilled, Semiskilled and Unskilled Workers to the University of Jaffna- 2021/2022

1. The Chairman, Procurement Committee, University of Jaffna invites sealed Bids for the above contract up to 2.00 p.m. on **06th September 2021.**

2. Period of contract should be 365 days subject to a performance evaluation period of 60 days.

3. Expected project cost per annum

| | |
|---|---|
| Total expected cost (annual) | 36 Million |
| Jaffna premises | 18 Million |
| Ariviyalnagar premises | 18 Million |

4. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.
   - 4.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.
   - 4.2 Average of annual volume of supply of skilled, semiskilled and unskilled workers contracts performed in the last 3 years should be at least Rs. **60 Million.**
   - 4.3 Must have satisfactorily carried out at least one supply of skilled, semiskilled and unskilled workers contract to a Government Department/ Corporation/ University during the last 3 years for not less than Rs. **20 Million.**

5. Interested bidders may obtain further information from Deputy Registrar, General Administration, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day during working hours.
Contact numbers:- Tele: 0212226517, Fax:-0212226517

6. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Deputy Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to **02nd September 2021** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of Rs. 2500.00. The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **People's Bank, University of Jaffna Branch Account** Number **162-1-001-6-0000880** at any Branch of People's Bank in Island wide.

7. Bidders are strongly advised to attend the Pre-bid meeting on 27th August 2021 at 10.00 a.m in the board room of the University of Jaffna and visit each location before pricing.

8. Bids shall be delivered or sent by registered post to the Deputy Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before **14.00 hrs on or before 06th September 2021** or be deposited in the tender box kept in the Office of the Registrar on or before the above date and time. Bids will be opened soon after closing the Bids in the presence of the bidders' representatives who choose to attend.

9. Bids shall be valid for a period of Days (should be as at 05th December 2021) from the date fixed for closing of bids or any extended period.

10. All bids shall be accompanied by a bid security for any which shall be;
   - In the form included with the Bidding document
   - In favour of Vice-Chancellor, University of Jaffna
   - For an amount of Rs.50,000.00 valid up to 03rd January 2022 (120 days from the date of closing of bid)
   - Issued by one of the agencies
     a. A bank operating in Sri Lanka;
     b. A bank based in another county by the guarantee "confirmed" by a bank operating in Sri Lanka;

Chairman
Procurement Committee,
University of Jaffna
14.08.2021


## நாடு கொரோனாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக உலகெங்கும் மக்கள் கொத்துக் கொத்தாக தொற்றாளர்களாக இனங்காணப் பட்டும், தனிமைப்படுத்தப்பட்டும், வைத் தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டும், இறுதியில் பல மில்லியன் கணக்கில் இறந்தும் உள்ளனர்.

இத்தகைய இக்கட்டான தருணமதில் உலக மாந்தர் அனைவரும் இன, குல, சாதி, சமய, அரசியல் பேதங்களைக் கடந்து ஒரே இறைவனின் பிள்ளைகள் என்கிற உணர்வோடு ஒருமித்துச் செயற்பட அழைக்கப்பட்டுள்ளோம்.

இன்று உலகளவில் தொழிற்துறைகள் முற்றாகவோ, பாதியளவிலோ செயலிழந்துள்ளன. இதனால் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளது.

மாணவர்களின் சுமுகமான பாடசாலைக் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதன் காரணமாக அவர்கள் மத்தியில் வெறுப்புணர்வு, பிடிப்பற்ற தன்மை, தனிமைப்படுத்தப்பட்ட சூழல் போன்ற உளவியல் தாக்கங்கள் தோன்றியுள்ளன.

மறுபக்கத்தில் முதியோரும், நீண்டகால தொற்று நோயினால் பாதிக்கப்பட்டோரும் தனிமைப்படுத்தலின் காரணமாக தமது எஞ்சிய நாள்கள் குறித்த அச்சத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இப்பெரும் போராட்டத்தின் மத்தியில் சுகாதார, மருவத்துப் பணியாளர்களின் அர்ப்பணம் நிறைந்த பணி மிகுந்த பாராட்டுதற்குரியது. தங்களது இன்னுயிரையும் துச்சமென மதித்து, மிகுந்த அர்ப்பணிப்புடனும், சேவை மனங்பாங்குடனும் மருத்துவத் துறையினரும், சுகாதாரத் துறையினரும், முன்நிலைப் பணியாளர்களும், துப்பரவுப் பணியாளர்களும் பெருந்தொற்றிற்கு எதிரான போராட்டத்தில் கரம் கோர்த்துள்ளமையானது நமக்குப் புதிய நம்பிக்கையைத் தருகின்றது.

இவர்களுக்காக இடைவிடாது இறைவேண்டல் புரிவோம். எமது ஆதரவுக் கரத்தை அவர்கள் பால் நீட்டுவோம். இக்காலத்தில் எம்மை நாமே பாதுகாத்துக் கொள்வது நம் அனைவரினதும் தலையாய கடமையாகும். அரசும், சுகாதார அதிகாரிகளும் எமக்கு எடுத்துரைக்கும் வரை நாம் காலந்தாழ்த்தாது, அவதானத்துடனும், விழிப்புடனும் செயற்படுவோம்.

காலம் தாழ்த்தாது பரிந்துரைக்கப்படுகின்ற தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வோம். அத்தியாவசியத் தொடர்பாடல்களில் சமூக இடைவெளியைப் பேணுவோம்.

எப்போதும் முகக் கவசம் அணிவது, தொற்று நீக்கிகளைப் பயன்படுத்தியோ அல்லது கைகளுக்கு சவர்க்காரம் இட்டு எம்மையே நாம் சுத்தமாக வைத்திருப்பது, தேவையற்ற, வீனாண ஒன்றுகூடல்களைத் தவிர்ப்பது போன்ற செயற்பாடுகளை கைக்கொள்ள வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும்.

பொது முடக்கம் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் அற்ற சூழ்நிலைகளால் தேவையில் இருப்போருக்கு எமது தாராள உதவிகளை மனமுவந்து செய்வோம்.

தனித்தோ குழுவாகவோ தொடர்புகளை ஏற்படுத்தி ஆதரவின்றி இருக்கும் மக்களுக்கு உதவிடுவோம்.

வழமைபோல ஆலயங்களிலும் கோயில்களிலும் ஒன்றுகூடி வழிபாடுகளில் ஈடுபட முடியாவிட்டாலும் தனித்தோ குடும்பமாகவோ எமது ஆன்மீகத்தை ஆழப்படுத்த ஏதுவான காலமிது என்பதனை மறவாதிருப்போம்.

தனித்திருக்கும் அல்லது தனிமைப் படுத்தப்பட்டிருக்கும் காலங்களில் இறைவேண்டல், தியானம் போன்ற ஆன்மீகச் செயற்பாடுகளின் வாயிலாக இறைவனோடு ஒன்றித்து எமது ஆன்மீக வாழ்வினைப் பலப்படுத்திக் கொள்வோம்.

பொருளாதார ரீதியில் துயருறும் ஏழை மற்றும் நாளாந்தத் தொழில் புரியும் மக்களையும், நீதிகேட்டுப் போராடும் பல்வேறுபட்ட தரப்பினரின் நியாயமான கோரிக்கைகளையும் கருத்தில்கொண்டு, அரசானது மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தி, நாடு கொரோனாப் பெருந்தொற்றிலிருந்து விடுபடவும், நாட்டில் சமத்துவமும் சமாதானமும் நிலவவும், போராடும் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்படவும் காத்திரமான முடிவுகளை எடுத்து செயற்பட வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறோம்.

நாமும் நம்பிக்கையோடு வாழ்ந்து அடுத்தவருக்கும் நம்பிக்கையை ஊட்டுவோம், விதைப்போம்.

இறைவன் தாமே எமது நட்டை எல்லா வகையான தீமைகளிலிருந்தும் விடுவித்து ஆசீர்வதிப்பாராக! – என்றுள்ளது.

## யாழ்.மாவட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எங்களுக்குரிய மிகக் குறைந்த வளங்களுடன் எமது சேவைகளை நாம் முன்கொண்டு செல்கின்றோம். வைத்திய நிபுணர்கள் வைத்தியர்கள் தாதியர்கள் மிகுந்த நெருக்கடியை இதனால் சந்தித்து வருகின்றனர்.

அந்தவகையில் இங்கு கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்து வருவதால் வைத்தியசாலை மிகவும் இக்கட்டான கட்டத்தில் உள்ளது.

எமது கோப்பாய் இடைத்தங்கல் சிகிச்சை நிலையத்தில் 420 பேரைப் பராமரிக்கின்ற வசதிகளே இருந்தும் நேற்று 430 பேருக்கு மேல் அதிகமாக அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

வைத்தியசாலைக்குத் தேவையான ஒட்சிசன் சிலிண்டர்கள் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. நாங்கள் இது வரை ஒட்சிசன் சிலிண்டரைப் பெற்றுக் கொள்ள அனுராதபுரத்துக்கு மட்டுமே சென்றிருந்தபோதும் அங்கும் தட்டுப்பாடு உருவாக நேற்று முதல் கொழும்புக்கும் செல்லுகின்ற நிலை உருவாகியுள்ளது.

வைத்தியசாலைக்கு விபத்துப் பிரிவுக்குத் தினமும் 60 தொடக்கம் 80 பேர் வரையில் அனுமதிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கும் எமது சேவையை வழங்குவதால் கொரோனா நோயாளர்களைக் கவனிப்பதிலும் நமக்கு சில சிரமங்களை எதிர்நோக்க வேண்டியதாக உள்ளது. எனவே, இவற்றைக் குறைக்க வேண்டும். இவற்றைக் குறைப்பதற்கான ஒரே வழி தேவையற்ற நடமாட்டங்களை குறைக்க வேண்டும். அத்துடன் ஆடம்பரமான கொண்டாட்டங்கள், தேவையற்ற விழாக்களை மக்கள் தவிர்க்க வேண்டும்.

எமது இக்கட்டான நிலையை மக்களுக்கு அறிவிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. நாம் மீண்டும் கூறுவது என்னவென்றால் மக்களாகிய நீங்கள் தேவையற்று வெளியில் நடமாடாமல் சமூகப்பொறுப்புடன் சமூக இடைவெளியை பயன்படுத்தி சுகாதார நடவடிக்கைகள் இறுக்கமாகப் பேணுவதுதான் வைத்தியசாலைக்கும் சமூகத்துக்கும் நீங்கள் செய்யும் ஒரேயொரு நன்மையாக இருக்கும் – என்றார்

## ஊடகத்துறையின்...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கிருஷாந்தி விவகாரம் யாழ்குடா நாட் டில் பெரும் பூதாகர உணர்வலைகளை ஏற்படுத்தி தேசிய,சர்வதேச தாக்கங்களையும் உருவாக்கத் தொடங்கியது. அந்த நிலைமையை உருவாக்கியதில் பெரும் பகுதி பொறுப்பு உதயனுக்குரியது.

அந்த விடயத்தில் உதயனை மிரட்டிப் பார்த்த இராணுவம் அது சரி வராமல் போகவே, சமாளித்துப் போக முடிவெடுத்தது. அதற்கான அழைப்பு 512 ஆவது பிரிகேட்டின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் காமினி ஜெயசுந்தரவின் சார்பில் வந்தது.

அவர் என்ன செய்தார், எப்படி நடந்து கொண்டார், கிருஷாந்தி குமாரசாமி காணாமல்போன மர்மத்தின் முடிச்சு அவிழ்ந்தது எப்படி – இவை போன்றவற்றின் சுருக்கத்தை நாளை பார்ப்போம். அதற்கும் 'ஊடக ஜாம்பவான் எஸ்.டி.எஸ். சிவநாயகத்தின் நினைவுப் பகிர்வு'க்கும் என்ன தொடர்பு என்ற உங்கள் கேள்வியும் புரிகின்றது. அதையும் விளக்கமாகத் தருவேன். கொஞ்சம் பொறுங்கள் வாசகர்களே!

(வளரும்.....)

# பாட்டும் நானே? ......

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேகம், நேரம், தூரம் என்பவை ஒன்றோடொன்று தொடர்புபட்டவை. இதிலே வேகம் என்பதை செயலாகவும், தூரம் என்பதை இடப்பெயர்ச்சியா கவும், நேரம் என்பதை காலப்பெயர்ச்சியாகவும் கொள்ளுதல்வேண்டும். ஒரு வேலைக்கும் இடப்பெயர்ச்சிக்கும் காலப்பெயர்ச்சிக்குமான தொடர்பை நாம் நடைமுறையில் அறிந்திருக்கிறோம். நீங்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போகவேண்டுமானால் குறிப்பிட்ட தூரத்தைக் கடந்தாகவேண் டும். அதே போல குறிப்பிட்ட நேரத்தையும் கடந்தாகவேண்டும். உங்கள் பயணத்தில் தூரத்தை நிறுத்துவீர்களேயானால் நேரம் நின்றுவிடும். அது போலவே நேரத்தை நிறுத்திவிடுவீர்களேயானால் தூரமும் நின்றாக வேண் டும். தூரத்தைக் கடக்க காலம் தானாகக் கடக்கப்படுவது போல், காலத்தைக் கடக்கமுடியுமானால் தூரமும் தானாகக் கடக்கப்படும் என்பதை நாம் தர்க்கத்தி னூடு அறியலாம். இந்த எண்ணத்தின் அடிப்படையில்த்தான் மேற்கு நாட்டார் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இடத்தில் முன், பின் நகர்தலை நாம் நன்கு அறிவோம். அதை நம் இஷ் டப்படி செயல்படுத்த நம்மால் முடிகிறது. ஆனால் காலத்தில் முன் நகர்தல் மட்டுமே நமக்குத் தெரிந்திருக்கிறது. பின் நகர்தலை நாம் இப்போது அறிய வில்லை. காலத்தின் முன் நகர்தல் கூட நம் எண்ணப்படி நடப்பதில்லை. அப்படி நடக்குமானால் நாம் இருபத்தைந்தாம் நூற்றாண்டிற்கும் சென்று வரலாம். இன்று நாம் காலத்தைக் கடப்பது என்பது கால ஓட்டம் நம்மைக் கடப்பதாகவே அமைந்திருக்கிறது.

காலம் நம்மைக் கடந்து கொண்டிருக்கிறதே தவிர, நாம் நினைந்து காலத்தைக் கடக்க முடிவதில்லை. அதுபோலவே கடந்து வந்த காலத்தினுள் நம்மால் நுழையவும் முடிவதில்லை. கால இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு விட்டால் இவையெல்லாம் சாத்தியமாகும் என்கிறார்கள்.

இடத்தில் முன், பின் பயணம் செய்வது போல, காலத்திலும் முன், பின் பயணம் செய்யலாம் என்பது மேற்சொன்ன கற்பனையாளர்களின் முடிவு. இடம் தூலமான பொருள். அதில் தூலமாய் இருக்கும் நம் உறுப்புக்கள் கொண்டோ அல்லது வேறு வாகனங்கள் கொண்டோ நம்மால் பயணிக்க முடியும். காலம் சூக்குமமான பொருள். அதில் மேற்சொன்னவற்றால் நாம் பயணிக்க முடியாது. அதற்கான சூக்குமக்கருவி ஒன்றைக் கண்டுபிடித்தால் தான் அதில் நாம் பயணம் செய்தல்கூடும். இன்றும் சூக்குமமான நமது மன உறுப்பால் நாம் காலத்தின் முன், பின் சென்று வருவது மேற்சொன்ன செய் திக்காம் சான்று.

எண்ணங்களால் மட்டுமன்றி உடலாலும் காலத்தில் பயணிக்கக்கூடிய ஒரு கருவியைத்தான் இப்பொழுது கற்பனையில் உருவாக்கிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கருவி மட்டும் வந்துவிட்டால் நாம் பல அதி சயங்களைக் காணலாம்.

உங்களுக்கு அலுப்படிக்கவில்லை என்றால், இன்னும் கொஞ்சம் சொல்லு கிறேன். செயல் என்பது இடத்தை ஒரு தளமாகவும் காலத்தை ஒரு தளமாக வும் கொண்டுதான் நடைபெறுகிறது.

தூரத்தில் நம் இஷ்டப்படி முன்பின் பயணிக்கலாம் என்றால் காலத்திலும் அதே போல முன்பின் பயணிக்கும் வசதி இருந்தாகவேண்டும். அத்தகைய கருவி ஒன்று மட்டும் வந்துவிட்டால் எரிபொருளின் தேவை மிகக்குறைந்து இன்றைய போக்குவரத்துச் செலவென்பது பூச்சியமாகிவிடும். (வெளிக்கிர கங்கள் வரை)

மேற்கு நாட்டார், அம்முயற்சி நோக்கி கற்பனையில் வந்துவிட்டார்கள். விரைவில் நிஜத்திலும் வந்துவிடுவார்கள் என்றே நம்புகிறேன். நமக்கென்ன அவர்கள் கண்டுபிடித்துத் தரும் வரையும் சும்மா உட்கார்ந்து ஊர்க்கதை பேசிக்கொண்டிருப்போம். நம் மத்தியிலும் அறிவுப் பிள்ளைகள் இல்லாமல் இல்லை. அவர்கள் இத்தேடலில் இறங்கி வென்றால், ஒரே நாளில் ஈழத்தமி ழினம் விண்தொட்ட இனமாக மாறிவிடும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியாரும் கம்பனைப் போய்ப் பார்க்கலாம் போல.**

# யானைகள் தினத்தினை முன்னிட்டு மக்களிடையே விழிப்புணர்வு நிகழ்வு






யாழ்ப்பாணம், ஓக.14

உலக யானைகள் தினத்தை முன் னிட்டு கடந்த வியாழக்கிழமை மக் களிடையே விழிப்புணர்வு ஏற்படுத் தும் முகமாக சைக்கிளில் யானைகள் பற்றிய விழிப்புணர்வு பிரசாரத்தை எதிர்காலத்தை நோக்கிய சுற்றுச்சூழல் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டது.

சிறுவர்களிடையே யானைகள் பற்றிய அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் சிறு நடைபயணமும், யானை பற்றிய கதைகளும் கூறப்பட் டன.

இந்த விழிப்புணர்வு பிரசாரம் யானை விரும்பி மனோகரன் சசிகர னின் தலைமையில் நடைபெற்றது.



02

**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

## பரிசு விவரம் :

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 5,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 3,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. திரு நல்லைத்திருவூஞ்சலை இயற்றியவர் யார்?**

........................................................................................

**2. நல்லூர் ஆலயத்தின் தற்போதைய தேர் எத்தனையாம் ஆண்டு வெள்ளோட்டம் கண்டது?**

........................................................................................

**3. வேதங்களை நான்காக வகுத்துத் தொகுத்தவர் யார்?**

........................................................................................

**4. திருவெம்பாவையின் இறுதி நாள் உற்சவம் எது?**

........................................................................................

**5. நல்லூரில் மஞ்சத் திருவிழா எத்தனையாம் நாள் இடம் பெறும்?**

........................................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூல மாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 01.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

02

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : ----------------------------------------
2. பிறந்த திகதி : ----------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ----------------------------------------
4. பாடசாலை : ----------------------------------------
5. முகவரி : ----------------------------------------

..............................................
கையொப்பம்

# நல்லூர் ஆலய உற்சவத்தில் மக்கள் – பொலிஸார் முறுகல்



நல்லூர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம், நேற்று (வெள்ளிக்கிழமை) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமான குறைந்தளவானோர் மாத்திரமே பூஜைகளில் பங்கு கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

நல்லூர் ஆலய முன்வாசலில், ஆலய நிர்வாகத்தினரின் உத்தரவில் பொலிஸாரின் பஸ் நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் கொடியேற்ற நிகழ்வை, பொது மக்கள் பார்ப்பதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இந்தச் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
எமது சேவையூடாக 11 kg க்கு மேல் பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கான
மாபெரும் பரிசுப்போட்டி
நீங்களும் வெற்றியாளராகலாம்...
070 330 5500
075 330 5500
077 888 9388
லண்டன் 1000/= (1 kg க்கு மேல்)
பிரான்ஸ்,ஜேர்மனி,பெல்ஜியம், டென்மார்க்,நெதர்லாந்
1 Kg க்கு 13,000/=
மேலதிக ஒவ்வொரு கிலோவுக்கும் 1100/=

1ம், 2ம், 3ம் பரிசு : 15kg பொதிகள் அனுப்பும் செலவு இலவசம்...
4 முதல் 10 வரை : 3600/=
பெறுமதியான ஆடைகளுக்கான 10L சலவைத்திரவம் 01 இலவசம்...
யாழ்ப்பாணம் | சங்கத்தானை | மல்லாவி
சங்கானை | பளை | மன்னார்
கல்வியங்காடு | கிளிநொச்சி | வவுனியா
ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | திருகோணமலை
நெல்லியடி | முல்லைத்தீவு | மட்டக்களப்பு
கைதடி | கனகராயன் குளம் | கொழும்பு

# ரயில்வே பொறுப்பதிகாரிகள் அடையாள வேலை நிறுத்தம்

ரயில்வே பொறுப்பதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு முதல் அடையாள வேலைநிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர்.

கொவிட் தொற்றுக்கு மத்தியில் ரயில் அதிகாரிகளுக்கு பாதுகாப்பாக செயல்பட தேவையான வசதிகள் செய்யப்படவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர். நேற்று (வெள்ளிக்கிழமை) நள்ளிரவு வரை அடையாள வேலைநிறுத்தம் தொடர்ந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# பதுளை வைத்தியசாலையில் 3 வைத்தியர்களுக்கு தொற்று

பதுளை வைத்தியசாலையில் நாளுக்கு நாள் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் காணப்படுவதாக வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் 3 வைத்தியர்கள் உட்பட 15 சுகாதார ஊழியர்கள் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என அரச வைத்திய அதிகாரிகள்சங்கத்தின்ஊவாமாகாணஒருங்கிணைப்பாளரும், பதுளை வைத்தியசாலையின் வைத்தியருமான பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை, பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த 60 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 38 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொவிட் அவதானம் காரணமாக 4 வார்டுகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன எனவும் நாளுக்கு நாள் இனங்காணப்படும் கொவிட் தொற்றாளர்கள் காரணமாக வைத்தியசாலையில் தீவிர சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன என வைத்தியர் பாலித ராஜபக்ஷ தொடர்ந்தும் தெரிவித்தார்.

INDIVIDUAL ENGLISH CLASSES
K. GANESH (BA. Pera)
இலகுவாக கதைக்கும் ஆங்கில வசன அமைப்பு முறை. Tenses, Active and Passive, Direct and Reported Speech
Grade 7 - GCE O/L - A/L
பட்டதாரிகள், தொழில் செய்வோர் அனைவரும்

077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

வல்வெட்டித்துறை நகர பிதாவுக்கு எமது கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 17.03.1945
அமரர்
மறைவு 11.08.2021
கோணலிங்கம் கருணானந்தராசா
(வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர்)
(தலைமைக் குழு உறுப்பினர் , தமிழ்த் தேசியக் கட்சி)
(முன்னாள் மத்திய குழு உறுப்பினர் , தமிழ் ஈழ விடுதலை இயக்கம் - ரெலோ)
அன்னாரின் பிரிவினால் துயருற்று இருக்கும் தாய்,மனைவி,சகோதர சகோதரிகள், மைத்துனர்கள் , மைத்துனிகள்,பெறாமக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,உறவினர்கள், நண்பர்கள் ,தமிழ்தேசிய உனர்வாளர்கள் , வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்கள்,செயலாளர் உட்பட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,பொதுமக்கள் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்
தமிழ்த் தேசியக் கட்சி (தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.08.2021 இல் வெளியிடப்பெற்றது.